நாடார் சமுதாயத்தின் கைராசியான திருமண தகவல் மையம் எங்களிடம் குமரி மாவட்டம், நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நாடார்களுக்கும் (இந்து, கிறிஸ்தவர்) வட்டார பழக்கத்திற்கேற்ப வரன் பார்த்து தரப்படும்.



**ஒருமுறை பதிவு கட்டணம் ரூபாய்-3000 மட்டும்.**
**நகை ஹாக்கத்திற்கு கமிஷன் கிடையாது.**

**முகவரி: எண்:389,** T.H.Road, (மெட்ரோ பில்லர் எண்-182),
**திருவொற்றியூர், சென்னை-19.**
**நிறுவனர்- R.சத்தியவான், இருளப்பபுரம், நாகர்கோவில்-**
**9444247847.**

**தொடர்பு எண்: 044-43508080, 7299989798, 8056299454, 7092890830.**


# காமராஜர் ஒரு சகாப்தம்

**ஏ.கோபண்ணா.**

### தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்

1928 இல் சர்ஜான் சைமனின் தலைமையில் வந்த கமிஷனில் இந்தியர் எவரும் இடம் பெறாமையால், அந்தக் கமிஷனைப் பகிஷ்கரிப்பது என்கிற தீர்மானத்தை அகில இந்திய காங்கிரஸ், முஸ்லிம் லீக், ஹிந்து மஹாசபை முதலான அனைத்துக் கட்சிகளும் நிறைவேற்றின. நாடு முழுவதும், கமிஷன் சென்ற இடங்களில் எல்லாம் "சைமனே! திரும்பிப்போ எனக் கோஷமிட்டுக் கருப்புக் கொடி காட்டப்பட்டது. கமிஷன் சென்ற இடமெல்லாம் ஹர்த்தால் நடைபெற்றது. அரசு அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டது. நேரு தாக்கப்பட்டார். பாஞ்சால சிங்கம் லாலா லஜபதிராய் தாக்கப்பட்டுச் சில நாளில் உயிரிழந்தார். 1929இல் மதுரை வந்த சைமன் கமிஷனை வெள்ளை அரசின் செல்லக் குழந்தைகள் (ஜஸ்டிஸ் கட்சியினர்) திருமலை நாயக்கர் மஹாலில் வரவேற்க ஏற்பாடு செய்திருந்தார்கள். கருப்புக் கொடி போராட்டமும் பகிஷ்கரிப்பும் நடைபெறாமல் தடுக்க அனைத்து ஏற்பாடுகளையும் வெள்ளை அரசுசெய்திருந்தது. ஆனால் ஜார்ஜ் ஜோசப்பும் காமராஜீம் ஆயிரக்கணக்கான தொண்டர்களைத் திரட்டித் தலைமை ஏற்று, முன்னின்று போராட்ட வெற்றி பெற காமராஜரின் திட்டமிட்ட செயல்பாட்டைத் தெளிவுப்படுத்தியது. 1929இல் இங்கிலாந்தில் நடந்த தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி தோற்கவும் தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்தது. இந்திய அரசியல் கைதிகளைச் சிறைச்சாலைகளில் நடத்தும் முறையைக் கண்டித்து ஜதீந்திரநாத் தாஸ் உண்ணாவிரதம் தொடங்கி 63வது நாளில் உயிர்த் தியாகம் செய்தார். நாட்டை உலுக்கிய இந்நிகழ்ச்சி காமராஜைப் பெரிதும் பாதித்தது.

1930இல் காந்தியடிகள் உப்பு சத்தியாக்கிரகத்தைத் தொடங்கினார். வட இந்தியாவில் மார்ச் 12இல் தண்டியில் காந்தியடிகள் தலைமையிலும் தென் இந்தியாவில் ஏப்ரல் 13ல் வேதாரண்யத்தில் ராஜாஜி தலைமையிலும் உப்புச் சத்தியாக்கிரகம் நடத்த, நாள் குறிக்கப்பட்டது. இந்தியா முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தத் தொண்டர்கள் குவியத் தொடங்கினார்கள். காந்தியடிகள் தலைமையில் நடந்த உப்புச் சத்தியாக்கிரகம் உலகின் கவனத்தை ஈர்த்தது. ராஜாஜியும் மற்ற தலைவர்களும் கைது செய்யப்பட்டார்கள். அடக்குமுறையும் தடியடியும் தாண்டவமாடின. பிரிட்டனில் வெள்ளையர்களே இதைக் கண்டித்தார்கள். காமராஜரும் கைது செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார். இதுவே அருக்கு முதல் சிறைவாசம். தண்டனை பெற்ற காமராஜரைத் திருச்சி மத்திய சிறையில் வைத்து, அங்கிருந்து பெல்லாரிக்குக் கொண்டு சென்று அலிப்புரம் சிறையில் அடைத்தனர். பேரன் சிறை சென்றதைக் கேட்டுப் பார்வதியம்மாள் படுத்த படுக்கையாகி நினைவிழந்தார். நாட்டாண்மை துரைசாமியும் முருக தனுஷ்கோடியும் அலிப்புரம் சென்று பாட்டியின் உடல் நிலையைக் காரணம் காட்டிப் பரோலில் அழைத்துவர முயன்றனர். பரோலில் வரக் காமராஜ் மறுத்து விட்டார். காந்தி இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டபின் 1931மார்ச் 12இல் பேராடிச் சிறை சென்ற எல்லாரையும் அரசு விடுதலை செய்தது, காமராஜரும் விடுதலை பெற்றார். விடுதலையாகி விருதுநகர் திரும்பிய காமராஜருக்கு மிகப் பெரிய வரவேற்பு கொடுக்கப்பட்டது.

- தொடரும்......

Free website for Matrimonial website : www.indianadarmurasu.com

மணப்பெண் பகுதி. (பெண்)

# நாடார் நவீன சுயம் வரம்



## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:க.கவிதா, சொந்தஊர்:-இட்டாமொழி, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-தாம்பரம், சென்னை, பிறந்ததேதி-9.4.1997, (27), ராசி-மேஷம், நட்சத்திரம்-பரணி, உயரம்-5.4, நிறம்-மாநிறம், படிப்பு-B.Sc., படித்த இந்த மணமகளுக்கு, படித்த நல்லவேலையிலுள்ள, நல்ல குணமுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9884766965, 9940693513.

| | | | |
|---|---|---|---|
| சூசுக் சனிகே | புத சந் | | |
| | இராசி | | |
| வியா | | | செவ் |
| | | | ராகு லக் |

| | | | |
|---|---|---|---|
| | | புத | |
| சுக் சூரி | அம்சம் | | கேது லக்வி |
| ராகு | | | |
| | | சந் செவ் | சனி |

File No:-M-527-G.

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:T.பொன்மாலா, சொந்தஊர்:மேலப்புதுக்குடி, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-31.10.1997, நிறம்-புதுநிறம், உயரம்-5.6, ராசி-துலாம், நட்சத்திரம்-சித்திரை, படிப்பு-B.E., (CSE)., MBA., Senior System Engineer., Infosys., இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் அணுகவும். 9003207002, 9444013984, e-mail:postbox33736@gmail.com., File No:M-328-G.

| | | | |
|---|---|---|---|
| சனி | | | |
| கேது | இராசி | | லக் |
| வியா | | | ராகு |
| செவ் | சுக் புத | சூரி சந் | |

| | | | |
|---|---|---|---|
| சுக் | கேது செவ் | | |
| | அம்சம் | | புத வியா |
| லக் சூரி | | | |
| | சந் | சனி ராகு | |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:S.Shree Bharathi, சொந்தஊர்:-விருதுநகர், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-15.8.1999, நிறம்-மாநிறம், ராசி-கன்னி, நட்சத்திரம்-ஹஸ்தம், படிப்பு-M.Sc., Food Science., Food Scientist, Training Period, மாதவருமானம்-70,000 பெறும் இந்த மணமகளுக்கு, நன்கு படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:044-48542967, 9445010252 File No:M-502-B.

| | | | |
|---|---|---|---|
| | வியா சனி | | |
| | இராசி | | லக்சூ பு ரா |
| கேது | | | சுக் |
| | | செ | சந் |

| | | | |
|---|---|---|---|
| சூரி | சந் | | செவ் கேது |
| | அம்சம் | | வியா |
| | | | சுக் சனி |
| ராகு | லக் புத | | |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:P.ரம்யா, சொந்தஊர்:கடலாடி, இராமநாதபுரம், இருப்பிடம்-சென்னை, பம்மல், பிறந்ததேதி-5.5.1997, நேரம்:காலை:10.20, வயது-26, உயரம்-5.6, நிறம்-மாநிறம், ராசி-மீனம், நட்சத்திரம்-ரேவதி, படிப்பு:B.Tech., MBA., இந்த மணமகளுக்கு, படித்து வேலை அல்லது படித்து சொந்ததொழில் செய்யும், சென்னையில் உள்ள வரன் மட்டும் அணுகவும் மணமகன் தேவை. தொடர்புக்கு:9444230273, 9003120114. File No:M-303-G

| | | | |
|---|---|---|---|
| சந்சனி பு கே | சூரி சுக் | | லக் |
| | இராசி | | |
| குரு | | | செவ் |
| | | | இராகு |

| | | | |
|---|---|---|---|
| சந் புத | | லக் | |
| | அம்சம் | | கேது |
| இராகு | | | குரு |
| சுக் | | சூசெ சனி | |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:பா.ரேவதி, சொந்தஊர்-விளாத்திக்குளம் வட்டம், ஜமீன் கரிசல்குளம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-நெமிலிவட்டம், பனப்பாக்கம் இராணிப்பேட்டை மாவட்டம்-631052, நிறம்-சிவப்பு, பிறந்ததேதி-20.5.1997, உயரம்-5.5, ராசி-துலாம், நட்சத்திரம்-சுவாதி, படிப்பு-M.Sc., Bio Tech., Diploma in Montessori., இந்த மணமகளுக்கு, சைவ உணவு உள்ளவர், டிகிரி படித்து நல்ல வேலையில் உள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9943027898, 9787004133 File No:M-293-G.

| | | | |
|---|---|---|---|
| சனி கே | புத | சூரி சுக் | |
| | இராசி | | |
| குரு | | | செவ் மாந் |
| | | லக் சந் | ராகு |

| | | | |
|---|---|---|---|
| | | | சுக் |
| சூரி | அம்சம் | | மாந்தி கேது |
| சந்தி ராகு | | | புத |
| | சனி செவ் | லக் | குரு |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:ம.பிரியதர்சினி, சொந்தஊர்:வேம்பார், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, தாம்பரம், பிறந்ததேதி-26.10.1998, நிறம்-மாநிறம், உயரம்-5.4, ராசி-விருச்சிகம், நட்சத்திரம்-கேட்டை, படிப்பு-B.Com., Senior Quality Tester)., IT., -onprocess Technology, மாதவருமானம்-1,00,000 பெறும் இந்த மணமகளுக்கு, அன்பான படித்த நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 8667359303., 8608232687, File No: M-176-G.

| | | | |
|---|---|---|---|
| சனி | | | |
| வியா கேது | இராசி | | |
| | | | செவ் ராகு |
| | சந் | சூரிபு சுக் | லக் |

| | | | |
|---|---|---|---|
| சந்சனி | | வியா | |
| கேது | அம்சம் | | புத |
| லக் | | | ராகு செவ் |
| சூரி | சுக் | | |

## இந்து நாடார் மணமகன் தேவை.

பெயர்:S.ஐஸ்வர்யா,சொந்தஊர்:பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம், இருப்பிடம்-நீதிபதிகள் குடியிருப்பு, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை, நிறம்-மாநிறம், உயரம்-5.3. எடை:57கிலோ, ராசி-விருச்சிகம், நட்சத்திரம்-கேட்டை, பிறந்ததேதி-16.4.1998, படிப்பு-B.E., ECE., Thangarajar College - madurai., Preparing for Civil Services., இந்த மணமகளுக்கு நன்கு படித்து, நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9443808324, 9486701789. File No:M-360-G.

| | | | |
|---|---|---|---|
| புத சனி | சூரி செவ் | | |
| சுக்குரு கேது | இராசி | | |
| | | | லக் ராகு |
| | சந் | | |

| | | | |
|---|---|---|---|
| | சூரி குரு | | செவ் |
| சுக் | அம்சம் | | லக் ராகு |
| சனிசந் கேது | | | |
| | | | புத |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:சிநேஹா, சொந்தஊர்:சாத்தூர், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-18.11.1991, வயது-32, ராசி-மீனம், நட்சத்திரம்-ரேவதி, நிறம்-கோதுமைநிறம், உயரம்-5.3, படிப்பு-B.Tech., (CSE)., வேலை-சாப்ட்வேர் என்ஜீனியர், மாதவருமானம்-70,000/- பெறும் இந்த மணமகளுக்கு, நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9944410712, 9514952555, File No:M-370-G

| | | | |
|---|---|---|---|
| சந் | | | கேது |
| | இராசி | | லக் |
| சனி | | | குரு |
| ராகு | சூரி புத | செவ் | சுக் |

| | | | |
|---|---|---|---|
| சனி கேது | | சுக் | செவ் |
| புத | அம்சம் | | சூரி |
| லக் சந் | | | |
| (மா) | | | குரு ராகு |

## இந்து நாடார் மணமகன் தேவை.

சொந்தஊர்-காரிக்கோவில், குண்டல், திசையன்விளை அருகில், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-30.9.1995, வயது-27, நிறம்-மாநிறம், ராசி-விருச்சிகம், நட்சத்திரம்-கேட்டை, உயரம்-5.3, படிப்பு-M.E, வேலை-Assistant Professor., மாதவருமானம்-30,000 பெறும் இந்த மணமகளுக்கு நல்ல குடும்பம், நன்கு படித்த நல்ல வேலையிலுள்ள தூத்துக்குடி,திருச்செந்தூர், திருநெல்வேலி மணமகன் தேவை. 9445307067, 9445426581, 6380306138, File No:M-154-G

| | | | |
|---|---|---|---|
| | கேது | லக் | |
| சனி | இராசி | | |
| | | | |
| | சந் வியா | செவ் ராகு | சூபு சுக் |

| | | | |
|---|---|---|---|
| லக் சந் | சூசெ கேது | | |
| சனி | அம்சம் | | சுக் |
| புத | | | |
| வியா | | ராகு | |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:E.பவித்ரா, சொந்தஊர்:காயமொழி, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-ஆதம்பாக்கம், சென்னை-88, பிறந்ததேதி-17.3.2000, ராசி-கடகம், நட்சத்திரம்-ஆயில்யம், நிறம்-சிவப்பு, உயரம்-154செ.மீ, படிப்பு-B.E.,EEE., வேலை-Fuji Electricindia pvt., மாதவருமானம்-22,000/- பெறும் இந்த மணமகளுக்கு, படித்து வேலை அல்லது தொழில் செய்யும் மணமகன் தேவை. 9171307110, 9092555754., File No:M-533-G.

| | | | |
|---|---|---|---|
| சூரி | செவி சனி | | |
| புத சுக் | இராசி | | சந் ராகு |
| லக் கேது | | | |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| | செவ் | | |
| கேது | அம்சம் | | சூரி வியா |
| சந் | | | சனி ராகு |
| சுக் | புத | | லக் |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:C.சுவாதி, சொந்தஊர்:உடன்குடி, தீத்தாபுரம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-16.6.1992, ராசி-தனுசு, நட்சத்திரம்-பூராடம் 1ம் பாதம், நிறம்-சிவப்பு, உயரம்-5.4, படிப்பு-BCA., வேலை-Senior Test Engineer Nous Info systems., Coimbatore, மாதவருமானம்-45,000/- பெறும் இந்த மணமகளுக்கு, டிகிரி படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு: 8015092229, 8754181403, 9787662842, File No:M-516-G.

| | | | |
|---|---|---|---|
| | செவ் | | லக்சுக் புதசூகே |
| | இராசி | | |
| சனி | | | |
| சந் ரா | | | |

| | | | |
|---|---|---|---|
| | புத | சனி ராகு | லக் செவ் |
| | அம்சம் | | |
| | | | வியா சந் |
| | கேது | சூரி சுக் | |

# இலவச திருமணத் தகவல்

தொடர்புக்கு: 30, தேரடி தெரு,
சைதாப்பேட்டை, சென்னை-15.
போன்:23811087.

## மணப்பெண் பகுதி (பெண்) இந்திய நாடார் முரசு இலவச சேவை

இந்து நாடார் பகுதி

| எண் | ஊர் | வயது | கல்வித்தகுதி | தேவையான தகுதி | உயரம் | செல்நம்பர் | இராசி-நட்சத்திரம் | விவரம் | பெண் உரிமை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | திருநெல்வேலி | 24 | MCA., | உயர்கல்விபடித்துநல்லவேலை | 155 | 9865424513 | கன்னி-சித்திரை | M512 | 40+5 |
| 2. | தூத்துக்குடி | 25 | B.Sc.,Bio Chemisry | டிகரிபடித்துநல்லவேலை | 5.3 | 9176375321 | தனுசு-பூராடம்1ம் | M514 | 25+2 |
| 3. | சீனதோப்பு | 25 | B.E., IT, | B.E., IT, வேலை | 175 | 9600249533 | கடகம்-ஆயில்யம்3 | M515 | 25பவுன் |
| 4 | உடன்குடி | 32 | BCA., | படித்துநல்லவேலையிலுள்ள | 5.4 | 8754181403 | தனுசு-பூராடம்1ம் | M516 | நேரில் |
| 5 | ஆறுமுகநேரி | 32 | M.Com.,B.Ed., | நல்லகுணமுள்ளவர் | 5.4 | 8940566566 | மேஷம்-பரணி | M517 | நேரில் |
| 6 | செம்மப்புதூர் | 26 | B.Sc.,CRC.,CPC | நல்லகுணம்நல்லவேலை | 150 | 8344576780 | மேஷம்-அஸ்வினி | M518 | 40பவுன் |
| 7 | குருவன்கோட்டை | 22 | B.Com.,CA., | நன்குபடித்துநல்லவேலை | 5 | 9176484873 | மிதுனம்திருவாதிரை | M519 | 100பவுன் |
| 8 | பேயன்விளை | 23 | MBA., HR | நல்லவேலைநல்லகுணம் | 5.6 | 9840828273 | ரிஷபம்மிருகசீரிடம் | M520 | நேரில் |
| 9 | மேலஇலந்தகுளம் | 22 | B.Sc.,MCA | டிகரிபடித்துநல்லவேலை | 5.2 | 8925266176 | சிம்மம்-பூரம்3ம் | M521 | 20பவுன் |
| 10 | அய்யாக்கோட்யூர் | 22 | B.Sc., Computer | வேலைஅல்லதுதொழில் | 5.11 | 9444246093 | விருச்சிகம்விசாகம் | M522 | 25பவுன் |
| 11 | கடம்பூர் | 22 | PharmD(Doctor) | படித்துநல்லவேலை | 5.3 | 9384050055 | ரிஷபம்-ரோகிணி | M523 | 50பவுன் |
| 12 | கலிதீர்த்தான்பட்டி | 27 | B.E.,(ECE)., | இன்ஜினியரிங் பி.இ | 153 | 9840401798 | மிதுனம்மிருகசீரிஷம் | M524 | 50பவுன் |
| 13 | அரசூர்பூச்சிகாடு | 26 | B.Sc.,Computsci | படித்த மணமகன் | 154 | 9500125041 | ரிஷபம்-ரோகிணி | M525 | 100பவுன் |
| 14 | அகோபாலபுரம் | 28 | B.Com.,MBA., | டிகிரிபடித்துநல்லவேலை | - | 9840041985 | மேஷம்-பரணி | M526 | 50பவுன் |
| 15 | இட்டமொழி | 27 | B.Sc., | நல்லகுடும்பம்நல்லவேலை | 5.4 | 9884766965 | மேஷம்-பரணி | M527 | நேரில் |
| 16 | முள்ளுப்பட்டி | 25 | M.Sc.,Microbiology | நல்லகுடும்பம்நல்லவேலை | 5.4 | 9042332080 | கும்பம்-பூரட்டாதி3 | M528 | நேரில் |

## C.S.I.நாடார்

| எண் | ஊர் | வயது | கல்வித்தகுதி | தேவையான தகுதி | உயரம் | | செல்நம்பர் | விவரம் | பெண் உரிமை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | நாகர்கோவில் | 28 | M.Com., | நன்குபடித்துநல்லவேலை | 5.2 | சென்னை | 8056697306 | 471-G | நேரில் |
| 2 | புதுக்கோட்டை | 25 | M.C.A., | பட்டதாரி நல்லவேலை | 5.4 | சென்னை | 9840750769 | 472-G | நேரில் |
| 3 | நாகர்கோவில் | 29 | MBBS.,MD., | நன்குபடித்துநல்லவேலை | 165 | சென்னை | 9444339144 | 473-G | நேரில் |
| 4 | உடையார்குளம் | 28 | B.E.,ECE., | Govt.job நல்லவேலை | 167 | சென்னை | 9444210559 | 468-G | நேரில் |
| R.C.நாடார் | | | | | | | | | |
| 1 | தூத்துக்குடி | 27 | M.A.,englit.,B.ed | நன்குபடித்துநல்லவேலை | 5.3 | சென்னை | 9578396593 | 380-G | நேரில் |
| 2 | கன்னியாகுமரி | 26 | B.E., CSE., | ஐ.டி/சப்ட்வேர்நல்லவேலை | 5.3 | சென்னை | 9370884061 | 381-G | 20பவுன் |
| 3 | சொக்கன்குடியிருப்பு | 32 | BBA., | டிகிரிபடித்துவேலையிள்ள | 5.3 | சென்னை | 9840241372 | 382G | நேரில் |
| 4 | நாகர்கோவில் | 34 | M.E., | B.E., M.E.,goodjob | - | சென்னை | 9444145692 | 383G | நேரில் |

நாடார் வரன்கள் வேண்டுமா?
இமயம்
நாடார் திருமண தகவல் மையம்
என்றென்றும் நமது பாரம்பரியத்தின் அடையாளம்....
ஒரு முறை பதிவுக் கட்டணம் மட்டுமே!
நகை, ரொக்கத்திற்கு கமிஷன் கிடையாது.
72995 56591 | 72995 56592

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:கே.சில்வியா, சொந்தஊர்:திருநெல்வேலி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பெருங்குடி பிறந்ததேதி-16.4.1998, நிறம்-மாநிறம், உயரம்-155செ.மீ, ராசி-விருச்சிகம், நட்சத்திரம்-கேட்டை, படிப்பு-B.Com., வேலை-தனியார் கம்பெனி, இந்த மணமகளுக்கு படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:6381114634, 9444534809. File No:-M-529-G.

| | | | |
|---|---|---|---|
| புத சனி | சூரி செவ் | | |
| வியா சுக்கே | இராசி | | |
| | | | ராகு லக் |
| | சந் | | |

| | | | |
|---|---|---|---|
| | சூரி வியா | | செவ் |
| சுக் | அம்சம் | | ராகு லக் |
| சந்சனி கேது | | | |
| | | | புத |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:B.சௌமியா, சொந்தஊர்:-வாத்தியார் குடியிப்பு உடன்குடி அருகில், இருப்பிடம்-சென்னை, சைதாப்பேட்டை, பிறந்ததேதி-27.8.1996, நிறம்-சிவப்பு, உயரம்-5.4, ராசி-மகரம், நட்சத்திரம்-அவிட்டம், படிப்பு-B.E., ECE., Software Engineer, Chennai, Software Engineer, ELB Learning., வருமானம்-வருடம்-10.5லட்சம், படித்த இந்த மணமகளுக்கு, நன்கு படித்த நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9444440412. 9790819077, File No:M-485-G.

| | | | |
|---|---|---|---|
| லக் கேசனி | | | சுக் |
| | இராசி | | செவ் |
| சந் | | | சூரி புத |
| வியா | | | ராகு |

| | | | |
|---|---|---|---|
| | | சுக் ராகு | |
| | அம்சம் | | சூசனி செவ் |
| | | | சந் வியா |
| | கேது | புத | லக் |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:T.வினோதினி, சொந்தஊர்:அரசூர், பூச்சிக்காடு, தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-23.3.1999, வயது-26, நிறம்-சிவப்பு, உயரம்-154, ராசி-ரிஷபம், நட்சத்திரம்-ரோகிணி, படிப்பு-B.Sc., Computer Science., Graduate Certiyicate in Bussiness, மாதவருமானம்-3,00,000 பெறும் இந்த மணமகளுக்கு, படித்த கனடா மற்றும் யுஎஸ்ஏ-வில் பணிபுரியும் மணமகன் தேவை. தொடர்புக்கு:9500125041, 9500125042. File No:M-525-G.

| | | | |
|---|---|---|---|
| சூபு வியா | சுக் சனி | சந் | |
| லக் | இராசி | | ராகு |
| கேது | | | |
| | | செவ் மா | |

| | | | |
|---|---|---|---|
| செவ் | | | சந்சனி லக் |
| ராகு | அம்சம் | | புத சுக் |
| மாந் | | | கேது |
| | வியா | | சூரி |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:S.சபரி ஜான்சி, சொந்தஊர்:மேலகானம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-மும்பை, பிறந்ததேதி-7.11.1997, ராசி-மகரம், நட்சத்திரம்-திருவோணம், நிறம்-புதுநிறம், உயரம்-145செ.மீ, படிப்பு-B.A.F., Accountant., இந்த மணமகளுக்கு, படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9833487785, 8108518957. 9949410787, File No:M-537-G.

| | | | |
|---|---|---|---|
| சனி | | | |
| கேது | இராசி | | |
| சந் வியா | | | இராகு |
| செவ் சுக் | லக்பு மாந் | சூரி | |

| | | | |
|---|---|---|---|
| | சந்சூரி கேது | | செவ் சுக் |
| | அம்சம் | | வியா |
| மா | | | |
| | லக் | புசனி இரா | |

## இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:வா.பவித்ரா, சொந்தஊர்:-வீரமாணிக்கம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-குரோம்பேட்டை, சென்னை, பிறந்ததேதி-20.9.1996, வயது-27, நிறம்-சிவப்பு, உயரம்-5.5, ராசி-தனுசு, நட்சத்திரம்-மூலம், படிப்பு-M.Com., படித்த இந்த மணமகளுக்கு, நன்கு படித்த நல்ல வேலையிலுள்ள சென்னையில் சொந்தவீடு உள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9841668844, 9941473733, File No:M-459-G.

| | | | |
|---|---|---|---|
| சனி(வ) கேது | | | |
| லக் | இராசி | | செவ் சுக் |
| | | | புதன் |
| வியா சந் | | | ராகு சூரி |

| | | | |
|---|---|---|---|
| | | லக்சந் ராகு | |
| சூரி | அம்சம் | | சனி புத |
| சுக் | | | |
| | கேது | செவ் | வியா |

## இந்து நாடார் மணமகன் தேவை.

பெயர்:தீபலட்சுமி, சொந்தஊர்:வள்ளிவிளை, திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-6.3.2000, நிறம்-மாநிறம், உயரம்-5.4, ராசி-கும்பம், நட்சத்திரம்-புரட்டாதி 2பாதம், படிப்பு-M.Com., படித்த மாதவருமானம்-25,000 பெறும் இந்த மணமகளுக்கு, படித்த வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9444430146, 9962532515, File No:M-361G

| | | | |
|---|---|---|---|
| செவ் | குரு சனி | | |
| சூரிபுத சந் | இராசி | | ராகு |
| சுக் கேது | | | |
| | | | லக் |

| | | | |
|---|---|---|---|
| லக் | சூரி | சந் | |
| கேது செவ் | அம்சம் | | குரு சனி |
| | | | ராகு சுக் |
| | | புத | |

# R.C. கிறிஸ்துவ நாடார் மணமகள் தேவை

பெயர்:யாஸ்வீன் அனிதா மேரி;., சொந்தஊர்-சொக்கன்குடியிருப்பு தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-31.1.1997, நிறம்-மாநிறம், உயரம்-5.3, படிப்பு-BBA., IT Private Sector., மாதவருமானம்-46,000 பெறும் இந்த மணமகனுக்கு, டிகிரி படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9840241372, File No:RC-382-G.

# இந்து நாடார் மணமகன் தேவை.

பெயர்:J.சுஜி (லோகேஸ்வரி), சொந்தஊர்:அகோபாலபுரம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, பிறந்ததேதி-14.8.1998, நிறம்-மாநிறம், உயரம்-, ராசி-மேஷம், நட்சத்திரம்-பரணி, படிப்பு-B.Com.,MBA., வேலை-ஸ்ரீ வெங்கடேஸ்வரா கலை அறிவியல் கல்லூரி, இந்த மணமகளுக்கு, டிகிரி படித்து நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. 9840041985, 9962751985. File No:M-526-G.

| | | | |
|---|---|---|---|
| வியா | சந்சனி லக் | | |
| கேது | இராசி | | சூசுக் செபுத |
| | | | ராகு |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| சூரி | சனி | லக் | ராகு |
| | அம்சம் | | செவ் வியா |
| | | | |
| கேது | சந் | புத | சுக் |

# இந்து நாடார் மணமகன் தேவை

பெயர்:S.அனிதா, சொந்தஊர்:வன்னிமாநகரம், தூத்துக்குடி மாவட்டம், இருப்பிடம்-சென்னை, திருவெற்றியூர், பிறந்ததேதி-4.6.1997, நிறம்-சிவப்பு, உயரம்-5.5, ராசி-ரிஷபம், நட்சத்திரம்-கார்த்திகை, படிப்பு-B.E., இந்த மணமகளுக்கு, பிஇ படித்து வேலையிலுள்ள மணமகன் தேவை. தொடர்புக்கு:9444432090, 9043171310 . File No:-M-535-G.

| | | | |
|---|---|---|---|
| சனி | | சூரிசந் புத | லக் சுக் |
| கேது | இராசி | | |
| வியா | | | செவ் ராகு |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| புத | | | சூரி கேது |
| சந் | அம்சம் | | |
| லக் | | | |
| செவ் ராகு | சுக் சனி | | வியா |

# நாடார் முரசு பிறந்த கதை

எங்கள் மூத்த சகோதரனை நாங்கள் எட்டு பேரும் மிகவும் உயர்வாக வைத்து மரியாதை செலுத்திவந்தோம். சொல்லப் போனால் எங்கள் தந்தைக்கு அடுத்தப்படியாக எங்கள் அண்ணனுக்கு தான் நாங்கள் அதிகமாக பயப்படுவோம். மிகவும் பக்தியாகவும், அதிக கட்டுப்பாடோடும், குடும்ப பெருமைக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருந்தார்கள். நாங்கள் எங்கள் குடும்பத்தில் அனைவருமே மக்கள் மத்தியில் ஒருவர் உயரிய நட்பு வட்டத்தில் மரியாதையோடு வாழ்வதற்கு எங்கள் அண்ணன் எங்களை வழி நடத்தியதே முக்கிய காரணம் இவ்வளவிற்கும் எங்கள் அண்ணன் எங்கள் தந்தையோடு நேர்முகமாக பேசியதே கிடையாது என் தந்தை என்ன சொன்னாலும் அப்படியே ஏற்றுக் கொண்டு கீழ்படிவார்கள். இத்தனைக்கும் என் தந்தை எங்களை அனைவரையும் சில சமயங்களில் ஒரு சர்வதிகாரியாகவே வளர்த்தார்கள். அவர்கள் விருப்பத்துக்கு மாறாக நாங்கள் எதுவுமே செய்ய முடியாது. இப்பேர்பட்ட சூழ்நிலையில் வளர்ந்த என் அண்ணனுக்கு திருமண காலம் வந்தது அப்போது நான் மிகவும் சிறுவனாக இருந்தேன். விவரம் தெரிந்தும் தெரியாத காலம், எது நல்லது எது கெட்டது என்று கூட தெரியாத வயது சொத்து சுகங்களில் மற்றும் கிராம முன்சீப் குடும்பம் என்ற பெருமையில் வாழ்ந்ததால் குரும்பு செல்லம், இந்த சூழ்நிலையில்தான் வளர்ந்தேனே ஒழிய பொறுப்பு கொடுத்து வளர்க்கவில்லை அந்த காலத்தில் நாடார்கள் வளர்ந்து வரும் காலம் நம் சமுதாயத்தில் பலர் பெரிய பணக்காரர்களாயிருந்தார்கள். ஆனால் படிப்பு அதிகமாக கிடையாது. ஒரு ஊரில் ஒரு சிலர்தான் உயர் படிப்பு படித்திருப்பார்கள் ஆகவே தான் பெண்ணை பெற்றவர்கள் படித்து பெரிய குடும்ப மாப்பிள்ளையை தேடிதேடி அலைவார்கள். என் அண்ணன் நமது சமுதாயத்தில் எம்.ஏ.வரை படித்து ஐ.ஏ.எஸ்க்கு படித்துக் கொண்டிருந்தார்கள். அந்த வகையில் அந்தகால இளைஞர் சமுதாயத்தில் எனது அண்ணன் பெயர் உயரிய நிலையில் இருந்தது கேரளா, நாகர்கோவில் போன்ற முன்னேறிய நாடார்கள் என் தந்தையை மாப்பிள்ளை கேட்டு நச்சரித்தார்கள். ஆனால் எதையும் என் அண்ணன் ஒத்துக்கொள்ளவில்லை. ஏனெனில் என் அண்ணனால் பொருளாதார ரீதியாக எந்த உதவியும் இல்லை. மேலும் அவர்களுக்கு அடுத்தபடியாக சகோதரிகளும் இருந்தார்கள் எது எப்படியோ என் தந்தையால் என் அண்ணனிடம் வெற்றி பெற முடியவில்லை. என் தந்தைக்கு விருப்பமான நல்ல குடும்ப உள்ளூர் பெண்களையும் என் அண்ணன் விரும்பாமல் இருந்தார். இந்த வேளையில் எனது பெரியப்பா மகளுக்கு மாப்பிள்ளை பார்த்து கொண்டிருந்தார்கள். எங்கள் பெரியப்பா ஒரு மரியாதையான மனிதர் கிராமணியார் குடும்பத்தை சேர்ந்த கிராம முன்சீப் குடும்பத்தில் உள்ள ஒன்றுவிட்ட என் தந்தையின் சகோதரர் ஈகிள் பிரதாப்சிங் அவர்களின் சொந்த பெரியப்பா அவர் சிலோனில் ஒரு மெடிக்கல் காலேஜில் மெடிக்கல் டிப்பார்ட் மென்டில் வேலை பார்த்து கொண்டு நல்ல உயரிய நிலையில் இருந்தார்கள். அவரை நாங்கள் டாக்டர் பெரியப்பா என்று அழைப்போம். வடக்கன்குளத்தில் அவரை டாக்டர் என்றுதான் அழைப்பார்கள். அவருடைய மனைவி எங்கள் பெரியம்மா மிகவும் அருமையான பெரியம்மா அவர்களை மிகவும் மரியாதையாக நாங்கள் மதிப்போம் நிறைய சொத்தும், சுகமும் இருந்தது மிகவும் செல்வாக்காக வாழ்ந்து வந்தார். மிகவும் நல்லவர்கள் ஆனால் அவர்களுக்கு குழந்தை இல்லை. அவர் நாகரீகம் தெரிந்தவர் அந்த சமயத்தில் தெரிந்த ஒருவரின் மூலமாக ஒரு பெண் அழகான பிள்ளையை தத்தெடுத்து வளர்த்து வந்தார்.

- தொடரும்.......

# நாடார் திருமணச் சடங்குகள்

--எஸ்.ஏ.இராம சந்திரடோகோ....

நமது சமுதாயத்தில் பெரும் தனகராகவும், மற்றும் சுமாரான தனவந்தராகவும் சிலர் இருக்கலாம். ஆனால் எஞ்சியவர்கள் சுமாரான வருவாய் உடையவர்களும், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுமே. இந்நாளில் இது ஏராளம்! ஏராளம்!! வாழ்க்கைத்தரம் உயர உயர வருமானம் கூடினாலும் வாழ்க்கைச் செலவு அதனிலும் மேலாக ஏறிக் கொண்டே போவதால் எங்கும் பற்றாக்குறையும், கடன் தொல்லையும், எதிர்பாரா செலவினங்களும் கூடிக் கொண்டே போகிறது. எவ்வளவு சம்பாதித்தாலும், ஒருமாத வருவாயில் செலவிட்டது போக மிஞ்சியதைக் கொண்டு ஒரு பவுன் தங்கம் வாங்குவதற்கு, நடுத்தர வருமானமுள்ள ஒருவருக்கு எத்தனை மாத காலமோ காத்திருக்க வேண்டியுள்ளது. இந்தியாவில் இப்பொழுது ஏற்பட்டுவரும் தங்க நகைப் பைத்தியத்தினால் தங்கத்தின் விலை நாளுக்கு நாள் ஏறிக் கொண்டே போகிறது. அண்டை, அயல் நாடுகளில் உள்ளவர்கள், இந்தியாவிற்கு கள்ளத் தனமாக தங்கத்தை கடத்திக்கொண்டு போனால் கப்பல் கப்பலாக பணம் சம்பாதிக்கலாம் என்று அல்லும் பகலும் கடத்தல் தொழிலில் ஈடுபடுகின்றனர். கடத்தல் தங்கம் பிடிபட்டு பறி போனாலும் கூட அடுத்த கடத்தலில் அந்த நஷ்டங்களை ஈடு செய்வதோடு மேலும் நல்ல ஆதாயம் சம்பாதிக்கலாம் என்ற கருத்தில் கடத்தல் தங்கம் நாட்டிற்குள் வந்து குவிகிறது.

தங்க ஆபரணங்களுக்கு ஆசைபட்டு இலட்ச லட்சமாக செலவிட்டு வீடுகளில் தங்க நகைகளாகத் திரட்டி உருட்டி பூட்டி வைத்திருப்பவர்கள். அவைகளை அணிந்துகொண்டு நகையும் தொகையும் நமன் விடு தூதர்கள் என்றறியாது டாம்பீகமாக வெளியில் நடமாடுகின்றனர். வீடுகளிலும், பஸ்களிலும், இரயில் வண்டிகளிலும், நடைபாதைகளிலும், இதர இடங்களிலும் அந்த நகைகளை பறி கொடுத்துவிட்டு பதறித் துடிக்கும் எத்தனையோ பேர்களை பார்க்கிறோம். நகைகள் மட்டுமா? உயிரையும் பறிகொடுத்தவர்களும் எண்ணற்ற பேர்கள் உள்ளனர்.

இத்தகைய சூழ்நிலை பெருகப் பெருக நாடெங்கிலுமே நயவஞ்சகர்களும் நாசகாவலர்களும் பெருகுகிறார்கள்.

வரதட்சணை என்ற பெயரால், வரன் வீட்டார் கேட்கும் நகை, தொகை மற்றும் பொருட்களை கொடுக்க முடியாமல் எண்ணற்ற இளங்கொடிகளின் இதயங்கள் எரிமலையாய் குமுறுகின்றன. நாடெங்கிலும் இக்கொடுமை மலிந்து நரக வேதனை பெருகிவிட்டது. இதைத் தவிர்க்க அரசாங்கம் கூட வரதட்சணை கேட்பதும், கொடுப்பதும் குற்றமெனச் சட்டமியற்றியிருந்தாலும் எவரும் அச்சட்டத்தைப் பொருட்படுத்துவதாயில்லை. எனவே சிந்திக்கத் தெரிந்த நாடார் சமூகத்தினரே! இனி நம்மை நாமே சீர்திருத்திக் கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது. கன்னிப் பெண்களின் பெரு மூச்சும் அவர்களைப் பெற்றத்தாய் தந்தையரது ஏக்கமும் நம்மை எங்கேயோ கொண்டு போய் விட்டிருக்கிறது. இனிமேலும் இந்நிலை நமக்கு வேண்டாம். குறைந்த பட்சம் நம்மை நாமே சீர்திருத்திக் கொள்ள வேண்டிய நல்ல காலகட்டம் இதுதான். நம்குலச் செல்வங்களை நசிந்து போக விடாமல் நம்மைநாமே கட்டுபடுத்திக் கொள்ளுவோம்.

**வரதட்சணைக் கொடுமை வராமல் தடுக்க வழி**

மனசாட்சியும், மற்றவர் நலனும் நாடுகின்ற அனைத்து வாலிபரும் “வரதட்சணை வாங்க மாட்டேன்” என்று வைராக்கியம் கொள்ள வேண்டும். கன்னியரும் “வரதட்சணை என்று கேட்டு வாய்ப்பிழக்கும் வாலிபர்க்கு கனவிலும் கழுத்தை நீட்ட மாட்டேன்” என்று உறுதி எடுத்து கொள்ள வேண்டும். சின்னாட்களுக்கு கன்னியர்க்கு இது சிரமம் என்றாலும், மங்கையர் இன்றி வாழ்கின்ற வாழ்வு மணம் பெறாது என்பதை வாலிபர் உணர்ந்தபின் வழிக்கு வருவார்கள். மனைவி இல்லா வாழ்வு இருண்ட வாழ்வு. இதனாலன்றோ.

“மனைக்கு விளக்கு வாணுதல்” என்று வண்டமிழ் புலவோரும் விளம்பினர்! ஈடிலா செல்வமிருந்தாலும், இணையிலா புகழிருந்தாலும், நாடிய வசதியுடன் நன்மக்கள் உறவிருந்தாலும், மாலை சூடிய மனைவி இல்லாவிடில் அவ்வாழ்வு உப்பில்லாப் பண்டம் போல்தான் என்ற உட்கருத்துட

“பொற்றலி யோடெவையும் போம்”

என்றுரைத்துப் போந்தார் ஔவையார் அன்றே. ஆதலின் கன்னியரே; சின்னாட்களுக்கு உங்களுக்கேற்படும் சிரமங்களைப் பொறுத்து, “வரதட்சணை என்று கேட்டு வட்டமிடும் வல்லூறுகள் போன்ற வாலிபர்களை மணக்க மாட்டேன்” என்று மனதிலுறுதி கொள்ளங்கள்.

சந்தைக்கு வந்த சரக்குகள் மலிவாகிவிட்டால் அவைகளே இனாமாக கொடுப்பவர் எவரேனு முண்டோ? சமீப காலங்களில் கோதுமை விலை குறைந்து விட்டது என்பதற்காக அமெரிக்கர் ஆயிரமாயிரம் டண் கோதுமைகளை கடலில் கொட்டினர். கள்ளுக்கடையில் கள் விலைபோகவில்லையென்றால் நிலத்தில் கொட்டி விணடிப்பார்களே தவிர விலையின்றி ஒருபோதும் கொடுக்கமாட்டார். அதுபோல் கயவர்க்கு வாழ்க்கைப்பட்டு கண்ணீர் வடிப்பதை விட கன்னித்தன்மை மாறாமல் காலங்கழித்தலே சாலச்சிறந்தது. உலகம் ‘கன்னியம்மை’ என்றாவது போற்றும். ஆதலால் பணத்தாசை பிடித்தலையும் பாவியர்க்கு ஒரு போதும் கன்னியரே கழுத்தை நீட்டாதீர் பண்டைக்கால வழக்கம் போல் உங்களுக்கே பணம் பொருளும் தந்து மணந்துசெல்ல வாலிபர் தவங்கிடக்கும் காலம் வரும்.

இனி, வரதட்சணை என்னும் பேரால் பொருட்களை நேரிலோ மறைமுகமாகவோ கொடுக்கின்ற செல்வச் சீமான்களை கொடுஞ்சிறையில் தள்ள வேண்டும். மகளிர் நல சங்கங்களும் மற்றைய அமைப்புகளும் இதனைக் கண்காணித்து வரல் வேண்டும். அனைத்து திருமணங்களும் அரசு அதிகாரிகள் முன்னிலையிலேயே நடைபெற்று பதிவு செய்தல் வேண்டும். காதல் மணம் புரிவோர்க்கு கைகொடுக்க வேண்டும். வேற்றுநாட்டு மகளிர் போன்று தமிழக மகளிரும் நகை பைத்தியதை விட்டொழிக்க வேண்டும். அதிக வரதட்சணையுடன் வந்த பெண்ணை அரிவையரோ ஆடவரோ ஒரு போதும் புகழலாகாது. அவர்களை துச்சமென ஒதுக்க வேண்டும்.

வரதட்சணை வாங்கக்கூடாது என்ற கருத்தை வலியுறுத்தும் நாடகத்தைப் பார்ப்போம், நாளிதழைப் படிப்போம், கட்டுரையைக் காண்போம், காவியங்கள் நடிப்போம், காரசாரமாய் மேடையிலும் பேசுவோம்- ஆனால், கணத்தில் மறப்போம். இதுதான் நம் இயல்பு. கல்வியறிவு பெற்றவரிடையே இம்மாதிரி கசடு இருப்பது கவலைக்குரியது. ஆதலின் இம்மாதிரி இழிகுணங்களை நீக்கிவிட்டு கற்றோர் செயலில் இறங்க வேண்டும்.

- தொடரும்......

# பாஞ்சாலி

எஸ்.விஜயராஜ்

**59...சதித்திட்டம்..**



கொள்கையில்.. பிடிவாதக் கொள்கை என்றும் ஒன்று உண்டு... அப்படி கொள்கை உள்ளவர்களைத்தான் உலகம் பிடிவாதக்காரர்கள் என்று சொல்லுகிறது.

மகாபாரதத்தில் அப்படிப்பட்ட கொள்கையாளர்கள்... இரண்டு பேர் உண்டு. ஒருவன் துரியோதனன்.. மற்றவள் குந்தி...

கர்ணனும் சகுனியும்... கிருஷ்ணனும் திரவுபதியும் பிரதானமான மனிதர்களாகத்தான் நம் கண்களுக்கு தெரிகிறார்கள். ஆனால்..

அவர்கள் பிரதானமானவர்கள் அல்ல.. உதவியாளர்கள்..

துரியோதனுக்கு கர்ணனும் சகுனியும்... குந்திக்கு கிருஷ்ணனும் திரவுபதியும்... உதவியாளர்கள்..

ஆனால்.. கதையின் மத்தியப் பகுதிக்கு மேல்.. குந்தியின் பிடிவாதங்களை... திரவுபதி தனது உடமையாக்கிக் கொள்கிறாள்.

இப்போது கொஞ்ச நாட்களாகத்தான்... அதாவது அஸ்தினாபுரம் இரண்டாக பிரிக்கப்பட்ட பிறகுதான்..

அஸ்தினாபுரத்து மக்களும் சரி... அரண்மனை பெரியவர்களும் சரி... சற்று நிம்மதியாக இருக்கிறார்கள்.. ஏன் தெரியுமா.. அண்ணன் தம்பி சொத்து சண்டைகள் முடிந்து விட்டன... சொத்து பிரிப்பும் முடிந்துவிட்டன.

இனி யுதிஷ்டிரனும் சரி... துரியோதனனும் சா... தனிக் காட்டு ராஜாக்கள்தான்... அவன் அந்த பக்கத்துக்கும்... இவன் இந்த பக்கத்துக்கும் ராஜா..

தேசம் இப்படித்தான் நம்பிக்கொண்டு இருந்தது. ஆனால் யுதிஷ்டிரனும் துரியோதனனுமோ.. அப்படி இல்லை.

மனதளவில் குமுறிக் கொண்டே இருந்தார்கள். என் தந்தை ஆட்சி செய்த நாட்டை... அநியாயமாக பிரித்து விட்டார்களே..

ஒரு பாதியை துரியோதனன் கையில் கொடுத்து விட்டார்களே... இப்படித்தான் குமுறினான். யுதிஷ்டிரன்.



துரியோதனனும் கூட அதே மனக்குறையோடுதான் இருந்தான்..

என் தந்தைக்கு உரிமைப்பட்ட நாடு இது.. அதை பிரித்து பாதியை யுதிஷ்டிரன்.. கொடுத்து விட்டார்களே.. இப்படி குமுறினான் அவன்.

இந்த குமுறல் இப்போது அந்த இரண்டு பேரோடு மட்டுமே நின்று விடவில்லை..

கர்ணன்.. சகுனி.. கிருஷ்ணன்.. திரவுபதி... அனைவரின் மனதிலுமே அது பரவி நின்றது..

எனவே.. பிரம்மாண்டமான ஒரு தாக்குதலை நடத்த உரிய நேரத்துக்காக காத்திருந்தார்கள் பாண்டவர்கள்.

ஆனால் துரியோதனனோ.. அப்படியல்ல.. உடனடியாக ஒரு தாக்குதலை நடத்த வேண்டும் என்றான்.

அதற்கு உரிய வாய்ப்பினை உடனே உருவாக்குங்கள் என்றும் தனக்கு வேண்டியவர்களுக்கெல்லாம் அவன் கட்டளையிட்டான்..

உடனே அதற்கான ஏற்பாடுகளை தடபுடலாக செய்ய ஆரம்பித்தான் சகுனி... ஆனால் யுத்தம் செய்வதற்கு அல்ல.. ஒரு யுக்தி செய்வதற்கு..

சமீபத்தில்தான் சகுனியும்.. மற்றும் துரியோதனன் அணியினரும் இந்திர பிரஸ்தம் சென்று வந்தார்கள்.. ராஜசூய யாகத்துக்கு..

அங்கே அவர்கள் சில மாயா ஜால கட்டிடக்கலையை பார்த்து ரசித்தார்கள்.

அங்கே அவர்கள் சில மாயா ஜால கட்டிடக்கலையை பார்த்து ரசித்தார்கள்.

அவை மயன் அமைத்தது.. இந்திர லோகத்து கட்டிடக்கலைஞர் விஸ்வகர்மாவின் ஆலோசனையின்படி கட்டப்பட்டது.

அஸ்தினாபுரத்துக்காரர்கள் அதை பார்த்ததுமே வியப்பில் ஆழ்ந்தார். அந்த வியப்பைத்தான் இப்போது தானும் செய்ய நினைத்தான் சகுனி..

எனவே கண்ணைக் கவரும் வகையில்.. பல புதிய மண்டபங்களை உடனடியாக கட்டுவதற்கு அவன் உத்தரவிட்டான்... - தொடரும்......




தமிழ்நாடு வணிக சங்க பேரவை
தலைவர் த.வெள்ளையன் அவர்களுக்கு
புகழ் அஞ்சலி!!

SRI DEVI
Enterprises Textiles & Readymades
1-A, B, Dhandeeswaram
Main Road, Velachery,
Chennai-42. Tel:22431334.
Cell:9444066626.





T.பரஞ்ஜோதி செல்வராஜ்
தலைவர், வேளச்சேரி நாடார் சங்கம்

# உழைப்பின் சரித்திரம்

## டைரி உலக சக்கரவர்த்தி ஈகிள்.பிரதாப்சிங் அவர்கள்

ஆசிரியர் நாடார் முரசு

அது பிரிட்டீசார் நமக்கு சுதந்திரம் கொடுத்துவிட்டு சென்றுவிட்ட காலம். பெரியப்பாவு புனித தெரசாள் துவக்கப்பள்ளியில் 5ஆம் வகுப்பு வரை முடித்துவிட்டு மேல்நிலை கல்விக்காக புனித தெரசாள் உயர்நிலை கல்வி நிலையத்துக்கு 6ஆம் வகுப்பில் அதாவது 1வது பாம்மில் சேரவேண்டிய காலம் அது வடக்கன்குளத்தில் கிறிஸ்தவ குருக்கள் மற்றும் கன்னியாஸ்திரிகள் பல கல்வி சாலைகளை நிறுவி நடத்தி வந்தார்கள். அந்த காலம் பள்ளிகள் ஆங்காங்கே குருகுல பள்ளிகள் ஒரு சில ஊர்களில் இருந்தது. மற்றபடி ராதாபுரம் வட்டாரத்தில் தான் பல பள்ளிகள் இருந்தது அந்த வட்டாரத்தில் வசதி உள்ளவர்களும் படிப்பில் ஆர்வம் உள்ளவர்களும் வடக்கன்குளம் தான் வருவார்கள். 5ஆம் வகுப்புவரை கல்வி கட்டணம் கிடையாது அதற்கு மேல் உயர்நிலை கல்வி படிக்கவேண்டுமாயின் கல்வி கட்டணம் உண்டு. இது அரசாங்க கட்டணமாகும் பல தனியார் பள்ளிகள் தான் அரசாங்க உதவி பெற்று நடத்தினார்கள். 1வது பாம்மில் இருந்து 3வது பாம் வரை கல்வி கட்டணம் $2^{1/3}$ ரூபாய் ஆகும். அதன் பின் 4வது பாம்மில் இருந்து ஆறாவது பாம் வரை கல்வி கட்டணம் $5^{1/4}$ ரூபாய் ஆகும். இந்த கட்டணம் கூட அந்த காலத்தில் கட்ட முடியாமல் பலர் பள்ளி படிப்பை பாதியிலேமுடித்துவிட்டு பாலர் வேலைக்கு சென்றுவிடுவார்கள். அப்போது பணப்புழக்கம் மிகவும் குறைவு தின கூலி 4ஆனாவில் இருந்து $1^{1/2}$ ரூபாய் வரை இருந்தது ஒரு படி அரிசி 3/4 ரூபாயாக இருந்தது. ஒரு சவரன் தங்கத்தின் விலை 13 ரூபாயாக இருந்த காலம் அரசாங்கம் உத்யோகஸ்தர்களுக்கு சம்பளம் 15ரூபாயிலிருந்து 100ரூபாய் வரை தான் இருந்தது. ஆனால் அது ஒரு பொற்காலம் பிரதாப்சிங் High School -ல் படிக்கிற காலத்தில் அவர்கள் பொருளாதார ரீதியாக மிகவும் கஷ்ட நிலையில் இருந்தார்கள். தாத்தா மதுரேந்திர நாடாரின் சிறு வியாபார கடையிலிருந்து அவர்களது காலங்கள் சிறப்பாக நடந்தது ஆனால் அவரது காலத்திற்கு பின் அந்த கடையை சரியான முறையில் நடத்தவில்லை பிரதாப்சிங் அவர்களின் பெரியம்மா மடத்துக்கார் என்பவர் பல கைதொழிலை குடும்ப சிறுவர்களுக்கு பயிற்சி கொடுத்தார்கள். அதன்படி வகை வகையான பனை ஓலை பெட்டிகள், கிலுக்கு போன்ற விளையாட்டு பொருட்களெல்லாம் செய்து விற்பார்கள் பசுமாடு தரும் பால், மோர், தயிர் வியாபாரம் செய்து பிள்ளைகளை காப்பாற்றினார்கள். பிரதாப் சிங் அவர்களின் தந்தையான மரியந்தோணி நாடார் பிள்ளைகளை பெற்று விட்டாரே ஒழிய அந்த பிள்ளைகளை வளர்ப்பதில் பெரிய அக்கரை காட்டவில்லை. சிறந்த எழுத்தாளராகவும், தர்க்கத்தில் சிறந்தவராகவும், நில அளவு எழுத்துறை போன்வைகளில் சிறந்து விளங்கினார் தினம் கோவிலுக்கு சென்று பக்தியாய்யிருந்தார் அவர். கைவசமிருந்த தொழில்களாலும் புலமையினாலும் சம்பாதித்தார் ஆனால் எந்த பொருள் உதவியும் பண உதவியும் குடும்பத்துக்கு இல்லை. ஜாதிபற்ற மிக்வரானதால் சென்னை விஜயதுரை சாமி கிராமணியாரிடம் சில காலம் தங்கி பல நாடார் வரலாறு போன்ற புத்தகங்களை எழுதினார், இலக்கியம் இலக்கணத்தில் வல்லவராயிருந்தார் ஆனால் தன் குடும்பத்தை சரியாக கவனிக்கவில்லை. அதே சமயம் பிள்ளைகளை மிகவும் கட்டுப்பாடாக வளர்த்தார். தினம் தினம் குளித்துவிட்டு பாடங்களை சரியாக படிக்க வைத்து குடும்பத்தை பிள்ளைகளை கௌரவமாக வளர்த்தாரே ஒழிய பண விஷயத்தில் சுயநலமாகமாகவே இருந்தார்கள். தந்தை இப்படி இருப்பதை பார்த்து சின்னப்பாவும், பெரியப்பாவும் மிகவும் கோபத்தில் இருந்தார்கள். ஆனால் தந்தை என்ற மரியாதையோடுதான் பிள்ளைகள் வளர்ந்தனர். ஏனெனில் மரியந்தோணி நாடார் ஒரு கௌரவமான குடும்பத்தை சேர்ந்தவர் அந்த ஊர் வடக்கன்குளத்தில் கிராம முன்சீப்பாக இருந்த குடும்பத்தில் ஒருவராய்யிருந்தவர் அந்த குடும்பத்தாருக்கு பல இடங்களிலும் சொத்துக்கள் இருந்தது அவற்றை எல்லாம் மரியந்தோணி நாடார் விற்றுவிட்டார். இந்த நிலையில் தனது மேல் படிப்பே ஒரு கேள்விக்குறியாக இருந்தது சின்னப்பாவுக்கும் பெரியப்பாவுக்கும். - தொடரும்.





தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவையின் மாநில தலைவர் வாழும் காமராஜர் சுதேசிய நாயகன் திருமிகு.த.வெள்ளையன் ஐயா அவர்களின் இழப்பு அனைத்து வணிகர்களுக்கும் பேரிழப்பு. அன்றைய முதலமைச்சர் அம்மையார் அவர்களை மரியாதை நிமித்தமாக சந்தித்த தருணம் அம்மையாரிடம் அன்பை மட்டுமே பெற்று வந்தவர். அரை நூற்றாண்டு காலம் வணிகர்களுக்காக உழைத்த மாபெரும் தலைவருக்கு அரசு மரியாதை செலுத்த மனமில்லை கோடிக்கணக்கான வணிகர் மனதில் மதிப்புடன் வாழ்வார் நம் தலைவர் நம் பேரவையை துண்டாடியவர்களுக்கு எப்படி மனது வரும். அம்மையார் இருந்து இருந்தால் சென்னையிலேயே இடம் கொடுத்து இருப்பார். ஒருவரின் அருமை அவர் இல்லாத போது தான் தெரியும் என்பார்கள். நம் தலைவருக்கு நாம் செய்யும் ஒரே கைம்மாறு நம்முடைய ஒற்றுமை மட்டுமே இதற்காக அனைவரும் பாடுபடுவோம் நன்றி இயற்கைக்கு எதிராக நாம் ஒன்றும் செய்ய முடியாது தலைவரின் இழப்பை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மனம் திறந்து பதிவிட்டேன் தவறு என்றால் மன்னிக்கவும்.

# அரசியல் படுகொலைகள்

D.M.ஜேம்ஸ்மார்ட்டின், சந்தா எண்: சாமுவேல் மருத்துவமனை, 9488129050, திங்கள் நகர், நெய்யூர்-629802, கன்னியாகுமரி மாவட்டம்

1.2024ஜூலை 5ம் நாள் சென்னை மாநகராட்சியின் சட்டம் ஒழுங்கிற்கு ஓர் கருப்பு தினமாக அமைந்தது. பட்டபகலில், பலபேர் காண ஆறு பேர் அடங்கிய அராஜக கும்பல் ஒன்று பயங்கர ஆயுதங்களுடன் வந்து பகுஜன் சமாஜ் கட்சியின் சென்னை மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங்கை வெட்டி படுகொலை செய்துவிட்டு தப்பி செல்கிறது. இந்த படுகொலைக்கு காரணம் என்ன? யார் காரணம்?

பழிக்கு பழியாக, அவரது விரோதிகள், திட்டமிட்டு செய்த படுகொலை என தெரியவந்தது. இம்மாதிரி படுகொலைகள் இன்று நேற்றல்ல மனிதன் தோன்றிய நாள் முதல் உலகெங்கும் நடந்து கொண்டுதானிருக்கிறது. போட்டி, பொறாமை, காமம், அதிகாரம், போராசை, பழிக்குப்பழி போன்ற எண்ணங்கள் மனதில் கருவாகி, உருவாகி, திட்டமிட்டு செயல்படுத்தப்படுகிறது.

2.விவிலிய விவரப்படி உலகிலேயே முதன் முதல் நடந்த கொலை பொறாமையால் நிகழ்ந்தது. உடன் பிறந்த தம்பி ஆபேலையே அண்ணன் காயின் கொலை செய்கிறான் பொறாமையால். அடுத்து நாம் காணும் இன்னொரு படுகொலை காமப்பசியால் நடந்தது. மாற்றான் மனைவி என்று தெரிந்தும், அவள் மீது மோகம் கொண்டான் மன்னன் தாவீது. தன் தளபதியின் மனைவி என்று அறிந்தும், போரில் அவனை வஞ்சகமாக கொலை செய்து விட்டு அவளை தன் மனைவியாக்கிக் கொள்கிறான்.

3.நமது இந்தியா உலகிலேயே பெரிய ஜனநாயக நாடு என்று பெருமை பேசிக் கொள்கிறோம். உலக உத்தமர் காந்தி, அகிம்சாமூர்த்தி, ஜீவகாருண்யசீலர் அந்தமகாத்மாவும் கோட்சேக்களால் சுட்டுக் கொல்லப்பட்டதும் இந்த மண்ணில்தான். பிரதமராக இருந்த இந்திராகாந்தியும் குண்டுகளுக்கு பலியானார், தனது மெய்காப்பாளர்களாலே! முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி மனித வெடிகுண்டுக்கு பலியானார் அரசியல் காட்புணர்ச்சியால், தமிழ் மண்ணிலே. அண்டை நாடான இலங்கையிலும் பல அரசியல் கொலைகள், நடந்தன, புலிகளால், அன்றும் இன்றும் இம்மாதிரி அரசியல் படுகொலைகள் உலகளவில் நடந்து கொண்டே தானிருக்கிறது.

4.மனம் போன போக்கில் வாழ்ந்து வந்த மனிதன் நேர்வழியில் நடந்திட, கடவுள் மோயீசன் வழியாக 10 கட்டளைகளை கொடுத்தார். மாட மாளிகையிலே வாழ்ந்த மன்னன் சித்தார்த்தன் மண்குடிசையிலே மக்கள் படும் துன்பங்களை கண்டான். புத்தராக மாறினான். அன்பு ஒன்றே சமாதானத்திற்குரிய வழி என்றான். கலிங்கப்போரில், மக்களின் ரத்தத்தால் தன் பாவங்களை கழுவி புனிதனான் சக்கரவர்த்தி அசோகன். புத்தர் போதனைகளை பின்பற்றி துறவி ஆகி அன்பை போதித்தான். இருந்தும் மக்கள் முற்றிலுமாக மனமாற்றம் அடையவில்லை.

"கண்ணுக்கு கண், பல்லுக்குப்பல், அயலானுக்கும் அன்பு பகைவனுக்கு வெறுப்பு என்றிருந்த யூத சட்டங்களில் சீர் திருத்தங்கள் செய்தார். இறைமகன் ஏசு. பகைவனுக்கு அன்பு, மன்னிப்பு, துன்புறுத்துவோருக்காக ஜெபித்தல் போன்ற நற்குணங்களை போதித்தார் மக்களுக்கு, தனது ரத்தத்தினாலே மக்களின் பாவங்களை கழுவி மனிதனை புனிதனாக்கினார். குற்றங்கள் தொடர்ந்து கொண்டு தானிருக்கின்றன.

5.இம்மாதிரி பாவச் செயல்களை சட்டத்தினாலோ, அதிக பட்ச தண்டனை கொடுப்பதினாலோ மட்டும் தடுத்து விட முடியாது. மாக்களாக வாழும் மக்கள் மனம் மாறி மனிதராக வாழ வேண்டும். தீவிரவாதத்திற்கு தீவிரவாதம் தீர்வாகாது."வாள் எடுப்பவன் வாளாலே மாழ்வான்", என்றார் ஏசு பிரான். தீவிரவாதிகள் என்றுமே நிரந்தரமாக வாழ்ந்ததில்லை. லட்சகணக்கில்லான யூதர்களின் சாவிற்கும், கோடிக்கணக்கிலான அப்பாவி மக்களின் மரணத்திற்கும் காரணமாக இருந்த ஹிட்லரின் முடிவு தற்கொலையில். ராஜீவ்காந்தியின் படுகொலையை முன்னின்று நிறைவேற்றிய ஒற்றைக்கண் சிவராஜனின் முடிவும் அது தான். இலங்கையில் பல பிரமுகர்களை துப்பாக்கி குண்டுக்கு இறையாக்கின பிரபாகரனும் குண்டாலே இறந்தான்.

6.கத்தியை தீட்டாதே, உந்தன் புத்தியை தீட்டு," என்றார் அறிஞர் அண்ணா. கத்தியை தீட்டினால் உயிர் போகும். புத்தியை தீட்டினால் உயிர்வாழும். தீமைகளை மறந்தால் நன்மைகள் உண்டாகும். அரக்ககுணங்களை அழித்தால் இரக்ககுணம் உருவாகும். "இன்னா செய்தாரை ஒருத்தல் அவர் நாணநன்னயம் செய்துவிடல்," என்ற வள்ளுவரின் வாக்கும், "யாராவது உன்னை வலக்கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறு கன்னத்தையும் காட்டு", என்ற ஏசுபிரானின் நற்செய்தியும் மக்களின் மனமாற்றத்திற்கு தானே!

பகையை மறந்து பழிவாங்கும் எண்ணத்தை துறந்து, காமம், அதிகாரம், பேராசை போன்ற தீயஎண்ணங்களை கைவிட்டு மனித நேயத்துடன் மனிதன் வாழ்ந்தால் மன அமைதி கிடைக்கும். ஆண்டவரின் சமாதனம் நம்மில் குடிகொள்ளும். "தனி மனிதன் திருந்தினால் சிறைச்சாலை தேவையில்லை" என்பது போல் உலகமே அமைதி பூங்காவாக இருக்கும்.

7. "அன்பே பிரதானம், சகோதர அன்பே பிரதானம்," என்று திருப்பலியில் உதட்டளவில் பாடினால் மட்டும் போதாது, அந்த பாடல் நம் உள்ளத்தில் என்றுமே ஒலித்துக் கொண்டே இருக்கவேண்டும். இருக்குமா?

ஏசுவுக்கே புகழ், ஏசுவுக்கே நன்றி மரியே வாழ்க!



**SVS நாடார் திருமண தகவல் நிலையம்**

**(அரசு அங்கீகாரம் பெற்றது.பதிவுஎண் 1004/2013)**

No.105, நல்ல தம்பி சாலை அண்ணா நகர், பம்மல், சென்னை-75.

எங்களிடம் இந்து சி.எஸ்.ஐ, ஆர்.சி நாடார் ஆண்/பெண் வரன்கள் (டாக்டர், இன்ஜினியர், வியாபாரிகள் மற்றும் உள் நாடு, வெளிநாட்டில் பணிபுரிபவர்களின்) விவரங்கள் நிறைய உள்ளன. உங்கள் மகன், மகள் திருமணத்திற்கு **தொடர்புகொள்ளவும்.ஆலோசகர்:D.சுந்தர்சிங் நாடார்B.A அரசு இணைச் செயலாளர் (ஓய்வு) செல்:9840093000, 9445093000 9698793000, 8248707424 E.mail:sundarsinghnmb@gmail.com / website: www.svsnadarmatrimony.com**

கலைமாமணி விருது பெற்ற திரு.தாமரை செந்தூர்பாண்டி எழுதும் சமூக தொடர்கதை.

# நிலவுக்குத் தென்றல் பகையானால்!

கலைமாமணி தாமரைசெந்தூர்பாண்டி, செல்:8838477377.



31.எம்.டியின் கார் வெகுதூரம் சென்று மறையும் வரை வாயிலிலேயே நின்று பார்த்துவிட்டு வீட்டிற்குள் போனாள் சாவித்திரி.

எதற்காகத் தன் வீட்டிற்கு வரச்சொல்லிவிட்டுப் போகிறார் இந்த மனிதர்....?

ஏதாவது திடுதிப்பென அவருக்குள் தோன்றியிருந்தால் தானே அப்படி அழைத்திருப்பார்...? என்னவாக இருக்கும்......?

மனதிற்குள் புதிரை விதைத்துவிட்டுப் போய்விட்டார். அந்தப் புதிரின் கதிரை அறுத்தாலொழிய மனம் அதையே சுற்றிச்சுற்றி வந்து தவிக்கும். அந்தத் தவிப்பைப் போக்கிக் கொள்ள உடனே மீண்டும் எம்.டி.வீட்டிற்குப் போக வேண்டும் போலிருந்தது.

இனி இந்த வேளையில் போகவும் முடியாது. போனால் அவரும் விரும்பமாட்டார் என்ற எண்ணம் நிழலாடியது.

சிரித்துக்கொண்டாள்.

அவர் வெளிப்படையாய் கேட்ட ஒரு வார்த்தையில் அவரைப் பற்றிய பயம் மனதில் நின்ற காலத்தை நினைத்துப் பார்த்தாள்.

அவர் தான் எவ்வளவு யோக்யமானவர்.......?

மனம் சொன்ன வார்த்தைகளை அதே மனம் மறுத்தது.

ஆண்கள் வேடதாரிகள்.....!

இப்படித்தான் முதலில் வேடம் போடுவார்கள். பசியை உள்ளடக்கி வைத்து இரைதேடும் விலங்குகள் கூட தங்கள் கோரப் பற்களை வெளியில் காட்டிக் கொள்ளாமல் செடிகொடிகளின் மறைவில் ஆடாமல், அசையாமல் மௌனத்தவத்திலிருக்கும் துறவிகளைப் போலத்தான் படுத்திருக்கும். அப்படி படுத்திருப்பதெல்லாம் பக்கத்தில் வந்து நடமாடும் இரைகளைக் கபளீகரம் பண்ணுவதற்காகத்தான். அப்படித்தான் ஆண்களும்!

ஆண்வர்க்கத்தை ஒருமுறை நம்பி, ஊரறிய, உலகறிய மேளதாளங்கள் மத்தியில், சொந்தபந்தங்கள் மத்தியில், பந்தலிட்டு, மாலைபோட்டு.......ஓ...........!

திருமணம் என்ற புனிதத்தில் கூட அடுக்கடுக்காய்.... அழுத்தம் திருத்தமாய்ச் சேறுபூசிவிட்ட ஆண்வர்க்கத்தில் யாரையும் நம்பாதே...!

சாவித்திரிக்குள் உள்ளிருந்து கண்ணிமைக்கும் எச்சரிக்கையொலிகள் வெளிக்கிளம்பி வீரியங்காட்டின.

வீட்டிற்குள் போய் முகம் திருத்தி டைல்ஸ் போட்ட தரையில் "அப்பாடா"வெனக் கால்நீட்டி அமர்ந்தாள்.

அனிதா அதற்குள் காப்பி கலந்தெடுத்து வந்தாள்.

சுடச்சுட.... கொதிக்கக் கொதிக்கத் தொண்டைக்குள் ஊற்றிக் கொள்ள வேண்டும் போலிருந்தது. ஆவி பறக்கும் காப்பியை அண்ணாந்து குடித்தாள். உள் நாக்கில் சுள்ளெனச் சுட்டது கூட இதமாகவேத் தெரிந்தது.

மனம் சற்று முந்தி மூழ்கிய சிந்தனைப் பேழையுள் புகுந்தது.

எம்.டி.நிச்சயம் ஆண்வர்க்கத்தின் அச்சிடப்படாத புதிய பக்கம்தான்!

இத்தனை வசதிகள் இருந்தும், தான் நினைத்திருந்தால் தங்கத்தையும், அழகையும் மேனி எங்கும் நிறைத்துக் கொண்டுவரும் பெண்ணைத் தேர்ந்தெடுத்துத் திருமணம் செய்திருக்க முடியும் என்ற நிலையிலிருந்தும் அந்த சங்கல்பத்தை ஏற்படுத்திக் கொள்ளாமல், வருடங்களையும், வயதுகளையும் ஓட்டிவிட்டு.

நினைத்தால் விரல் நீட்டும் மூலைகளிலெல்லாம் ஏனென்று கேட்க எத்தனையோ பணியாளர்களை வைத்துக்கொள்ளலாம் என்ற நிலையிலிருந்தும் தாய் சமைத்த சமையற்கூடத்தில் இதுவரைப் பிறிதொருவர் நுழையவிடாமல், தானே தன் தேவைகளுக்குச் சமைத்துண்ணும் அந்த மனிதருக்கு இலக்கணம் எப்படிச் சொல்வது...? மனதில் ஒரு பயமும் மரியாதையும் பிறந்தது. மனதை மூடிக்கொண்டு எழுந்தாள்.

இரவு சாப்பிடும்போது அனிதாவைத்தன் அருகே அழைத்து வைத்துப் பேசினாள்.

"அனிதா......."

"என்னண்ணி......?"

நீ தனியே வீட்டிலிருப்பதைவிட ஒரு காரியம் பண்ணுகிறாயா?"

"என்ன?"

"ஒரு கல்லூரியில் சேர்ந்து படிக்கிறாயா?"

"அண்ணி....!" ஆச்சரியத்தோடு பார்த்தாள்.

"ஏன் அப்படிப் பார்க்கிறாய்?"

"எனக்குப் படிப்பதென்றால் ரொம்ப ஆசை! தினமும் சமைத்து வைத்துவிட்டு காலேஜ் போய் வந்துவிடுவேன். ஏற்பாடு செய்து தருவீர்களா?"

"நிச்சயம்!"

அனிதா சாவித்திரியின் கைகளைப் பிடித்துக் பிடித்துக் கண்களில் ஒற்றிக்கொள்ளும்போது ஈரம் பிசுபிசுத்தது.

"ஏய்....ஏய்..... என்னடி அனிதா......அழுகையா.......?"

"இல்லை அண்ணி...... ஆனந்தம்! உங்களுக்கு நன்றி சொல்வது எப்படி.......?

"நன்றாகப் படித்து..... உயர்ந்த ஸ்தானத்தைப் பிடித்து.....ஆண்வர்க்கத்தை நம்மை நோக்கி மரியாதையோடு பார்க்கச் செய்தவன்மூலம்!"

"செய்வேன் அண்ணீ! செய்வேன்! உங்கள் வாசனை எனக்குள் பட்டுக்கொண்டிருக்கும் வரை அதை மட்டும்தான் என்னால் என்னால் மட்டுமென்ன எல்லோராலும் செய்யமுடியும்!" சொல்லிவிட்டு சாவித்திரியின் மடியில் படுத்தாள். அன்போடு அவள் தலையை வருடிக்கொடுத்தாள் சாவித்திரி. விரல் நுனிகள் கேசத்தை வருட வருட சாவித்திரியின் மன நுனிகள் நடந்து போன பாதைகளை வருடிப் பார்க்கத் தலைப்பட்டன.

"அடேய்....அடேய்....... ஆண்மையின் அழுகுக்கு ஒரு அவலட்சணத்தை மகுடமேற்றிய ரகுவரா... உன் தங்கைகூட உன் தங்கைகூட உனக்குப் பாடம் சொல்லும் ஒரு புத்தகமாகத்தான் பேசுகிறாள்! நானே எழுதப்போகும் இந்தப் புத்தகம் உன்னைக் குப்புற வீழ்த்த வந்து நிற்கும்போது நீ தற்கொலைதான் செய்யப் போகிறாய்......! மனம் வக்கிரமாய் குதூகலித்தது.

அனிதா சாவித்திரியின் மடியிலேயே தூங்கிப் போனாள். அவளைச் சிறுகுழந்தையைக் கிடத்துவதுபோல் அங்கேயே கிடத்திவிட்டு எழுந்து, ஒரு தலையணையை எடுத்துவந்து அவள் தலையைத் தூக்கி அணைகொடுத்தாள்.

விரலைச் சப்பிக்கொண்டு தூங்கும் குழந்தையைப் பார்ப்பது போல் பார்த்தபோது தாய்மை அவளுக்குள் பிரவகித்தது.

நாளை எம்.டியைப் பார்க்க வேண்டும். பார்க்கும் போது அனிதாவிற்கு ஒரு இடம் கல்லூரியில் வாங்கித்தர வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டாள்.

படுக்கைக்குப் போனாள்.

உறக்கம் அவளைத் தழுவியது.

அடுத்த நாள் எழுந்து, குளித்து, புறப்பட்டு பள்ளிக்குச் செல்லும் போது, டிபன் பாக்ஸில் சுடச்சுட சாதம் வைத்துத் தந்தாள் அனிதா..

"அனிதா....."

என்ன அண்ணி?

இன்று சாயங்காலம் நான் கொஞ்சம் பிந்தி தாம்மா வருவேன சரி அண்ணி"

பஸ்சைப் பிடித்துக் கிளம்பினாள். பள்ளி வகுப்புகள் நிரம்பி வழிய மாணவர்கள்தான் என்றாலும் குண்டூசி விழுந்தால் ஓசை கேட்கும். அவ்வளவு அமைதி! அமைதியும், சாந்தமும் நிலவுகின்ற இடத்தில்தான் ஆண்டவன் அமர்ந்திருக்க முடியும் என்பது அங்கு வழி வழியாய் மாணவர்களுக்குப் போதிக்கப்பட்டு வருவதனால்தான், இந்தப் பள்ளிக்கு வந்த இரண்டாம் நாளிலேயே நமக்குள்ளும் ஒரு அமைதி நிலவுகிறதோ? என் சிந்தனை எழுந்தது சாவித்திரிக்குள்.

உடனே தனக்கு இந்த அமைதி தவழும் பள்ளியில் ஒரு ஆசிரியையாகும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த எம்.டி.யின் நினைவு வந்தது.

நினைவுகளை நெஞ்சு சுமந்து பழகிவிட்டால் பிறகு நினைப்பது மட்டுமே சுகம் என்றாகிவிடக்கூடாது என்ற கணிப்பில் சிந்தனையை உதறிக்கொண்டு வகுப்பறைக்குள் பாடம் நடத்துவதில் மூழ்கினாள். பள்ளி முடிந்ததும் பள்ளி கூடத்தைவிட்டு வெளியேறிய சாவித்திரி நேராக எம்.டி.யின் வீட்டிகுப் போனாள்.

வீட்டுக்கதவு மூடிக்கிடத்து. அழைப்புமணிப் பொத்தானை அழுத்தினாள்.

ம்கூம் ! திறக்கவில்லை.

மணியைப் பார்த்தாள்.

ஓ.........இனிமேல்தான் அலுவலகம் விட்டே அவர் புறப்படுவார்....!

மனதிற்குள் சிரிப்பு வந்தது. அந்த அலுவலகத்தில் அத்தனை நாள் வேலை, பார்த்த நமக்கு அவர் இப்பொழுது வந்திருக்கமாட்டார் என்று கூட தோன்றாமல் போனது ஏன் என்று நினைத்தப்படியே போர்டிகோவின் முகப்புத் திண்டில் அமர்ந்து கொண்டாள்.

ஒரு மணி நேரம் காத்திருந்த பின் எம்.டி.யின் கார் அங்கு வந்து நின்றது காரைவிட்டு இறங்கியதும் சாவித்திரியைப் பார்த்தவர் ஆர்வத்தோடு கையசைத்தபடியே அவளருகில் வந்தார்.

என்ன மிஸஸ் சாவித்திரி / வந்த ரொம்பநேரம் ஆகிவிட்டதோ..? சிரித்தார் அவர்.

"உங்களை அதிகநேரம் காக்க வைத்திருக்கிறேன். ஸாரி.. சொல்லிக்கொண்டே கதவைத் திறந்தாள்.

"வாருங்கள். உள்ளே வாருங்கள்..... ஒரு அமைதி மிகுந்த அன்போடு அழைத்தார் உள்ளே போனாள்.

"உட்கார்ந்திருங்கள்.... " ஒரு அமைதி மிகுந்த அன்போடு அழைத்தார்.

உள்ளே போனாள்.

"உட்கார்ந்திருங்கள்... ஒரு ஐந்து நிமிடங்களில் வந்து விடுகிறேன்.

உள்ளே போய் ஆடை, மாற்றி முகம் கழுவி. மெல்லிதாய்த் திருநீறு பூசிக்கொண்டு வந்தவர், அந்த நீண்ட சதுர ஹாலில் அர்த்தம் நிறைந்த புன்னகைகளை அள்ளி வீசிக் கொண்டிருக்கும் ஆன்மீகச் சீலர்களையும், ஆஞ்சநேயரையும் ஆழ்ந்த நோக்கில் மனம் முழுவதும் நிரப்பிக்கொள்வது போல் ஒருமுறை வரிசையாய் வந்து நின்று கரம் குவித்தார்.

"ம்ம்ம்...... அப்புறம்......?" என்று கேட்டபடியே சாவித்திரிக்கு எதிரேயுள்ள சோபாவிலமர்ந்தார்.

"நீங்கள் களைப்பாக இருக்கிறீர்களே மிஸஸ் சாவித்திரி..... கொஞ்சம் முகம் கழுவி ரிலாக்ஸ் பண்ணிக் கொள்ளக்கூடாதா.?

இல்லை ..... வேண்டாம்...

"ஒன்றும் வித்தியாசமாய் நினைக்காதீர்கள். போங்கள். போய் முகம் கழுவிக் கொள்ளுங்கள்..." இல்லை வேண்டாம்.

இன்னும் உங்களுக்கு இந்த வீடு அந்நியமாய்த் தோன்றுகிது... இல்லையா.....? ஓ.... நோ..... நான் முகம் கழுவிக் கொள்கிறேன். எழுந்தாள்.

பாத்ரூம் எங்கிருக்கிறது.

அதோ....... அங்கே...... காட்டினார்.

எழுந்து போனாள்.

பாத்ரூம் மிகப் பெரியதாய் சுத்தமாயிருந்தது.

முகத்தில் நீரை அள்ளித் தெளித்துத் தெளித்து அழுந்த துடைத்தபோது புதிதாய் ஒரு தெம்பு பிறப்பது போலவே தோன்றியது.

முகத்தைத் துடைப்பதற்குத் துணியைத் தேடினாள். ஹாங்கரில் புதிதாய் ஒரு துவாலை தொங்கிக் கொண்டிருந்தது. அதைத் தொடாமல் தன் சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு வெளிப்பட்டவள் முன் எம்.டி நின்று கொண்டிருந்தார். அவர் கையில் இருந்ததைப் பார்த்து ஆச்சரியத்தால் அப்படியே நின்றுவிட்டாள் சாவித்திரி.


R.பிரகாஷ் நாடார்

போன்:22201348, 9884301348, 9444273385



K.M.DIESEL & ELECTRICAL CENTRE

All Types of CRDI, EDC, Pumps, Nozzle Service & Auto Electrical, Turbo Service Bosch: Battery, D Filter, Oil, Heater Plug, Electrial Spares available,



20, 2nd Street, Kannigapuram, Velachery Main Road, Guindy, Chennai-32. E-mail:kmd0ecenre @gmail.com

ஸ்ரீ கருமாரியம்மன் துணை

செல்:80157 47069, 9444273385.

சிவமணி ஆட்டோபார்ஸ்

SIVAMANI AUTO PARTS

Specialist in:Tata, Maruthi, Mahindra, Toyota, Force

No:20/1, 2nd Street, Kannaigapuram, Velachery Main Road, Guindy, Chennai-32.



ஆர்.சித்தர்ராஜ் நாடார்

குட்வில் ரியல் எஸ்டேட்

136, ஆற்காடு ரோடு, வளசரவாக்கம், சென்னை-87. செல்:9444083769







செல்:9444484977, 9962454977, 044-25980239.

ஸ்ரீ மகா கணபதி ஜோதிட நிலையம்



ஜோதிடர்.த.பெ.சுந்தர் நாடார்

ப.எண்:8, பு.எண்:15, நல்லப்பவாத்தியார் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை-600 021.

**ஜாதகம் திருமண பொருத்தம் வாஸ்து பார்க்கப்படும்.** நேரம்:காலை8.00மணி முதல் மதியம்2.00 மணி வரை

# வெற்றிப்படிக்கட்டு

வசந்த் & கோ H.வசந்தகுமார்M.A., Ex.MP (Member of Parliament)

**91.ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு!!!!**



ஒற்றுமை என்பது ஒன்றுபட்ட சக்தி. இதை உணராமல் பல குடும்பங்களில், பங்காளிச் சண்டை நிறுவனங்களில் போட்டி, பொறாமை, பகை உணர்வு இதற்கு ஒரே தீர்வு அன்பு. அன்பு என்பது உங்கள் உறவினர் மீது மட்டும் செலுத்தப்படுவது அல்ல அனைவரையும் அன்பால் ஈர்ப்பதுதான் ஒற்றுமைக்கு வழி. ஒரு பெரிய பாராங்கல்லை ஒரு தனி மனிதனாக இருந்து நகர்த்துவதை விட 10பேர் சேர்த்து மொத்தச் சக்தியையும் செலுத்தி எளிதில் நகர்த்திவிடலாம். ஒரு தெரு நாய் இறைவனிடம் போய், “சாமி, ஆடு, கிடாய்களை மனிதர்கள் அடித்துச் சாப்பிடுகிறார்கள். அப்படியிருந்தும் அவை மந்தை மந்தையாகப் பெருகி வாழ்கின்றன. ஆனால் எங்களை மனிதர்கள் கொல்வதுமில்லை உண்பதுவும் இல்லை. அருகில் சொன்னால் “சீ நாயே போ” என்றுதான் விரட்டுகிறார்கள்.

அப்படியும் நாங்கள் எண்ணிக்கையில் குறைந்து கொண்டே போகிறோம். என்று கேட்டது. அதற்குக் கடவுள். மனிதர்கள் உருவம் எடுத்து அந்த நாயை வா என் பின்னால் என்று கூட்டிச் சென்றார். நான்கு ஆடுகள் அடைக்கப்பட்டிருந்த கொட்டடிலில் ஒரு புல்லுக் கட்டை ஆடுகளுக்கு மத்தியில் போட்டார்.

அடுத்து நான்கு நாய்கள் அடைக்கப்பட்டிருந்த ஒரு அறைக்குள் சென்று நாய்களுக்கு நடுவில் ஒரு தட்டு இறைச்சியை வைத்துவிட்டு வந்தார். “சரி வா. நாம் ஓர் அரைமணி நேரம் கழித்து வந்து பார்ப்போம் நாய்கள் எல்லாம் எப்படிச் சாப்பிட்டு முடிக்கிதென்று பார்ப்போம்” என்று சொல்லி அந்த நாயை அழைத்துக் கொண்டு வெளி வந்துவிட்டார்.

அரைமணி நேரம் கழித்து நாயை அழைத்துக் கொண்டு நாய்கள் இருந்த அறைக்குள் சென்றார். அங்கே இறைச்சி அப்படியே இருந்தது. ஆனால் நான்கு நாயும் ஒன்றை ஒன்று முறைத்துக்கு கொண்டு உறுமிச் சண்டை போட்டுக் கொண்டே இருந்தன. கடவுள் சிரித்தார். நாய் முழித்தது. அப்புறம் அப்படியே ஆடுகள் இருந்த கொட்டிலுக்கு நாயுடன் சென்றார். அங்கே புல்லுக்கட்டு காலியாகி இருந்தது. நான்கு ஆடுகளும் அனைத்துப் புல்லையும் தின்றுவிட்டு அமைதியாகப் படுத்து அசை போட்டுக்கொண்டிருந்தன. அது மட்டுமல்ல இந்த முதலாளி நமக்காக புல் போட்டு அன்போடு கவனித்துக் கொண்டார். அதற்கு நன்றிக்கடனை நாம் நம்மையே அவருக்கு உணவாகத் தருவோம் என்ற ஒன்றுக் கொன்று நிறைவாகப் பேசிக்கொண்டு இருந்தன. கடவுள் தன்னுடன் வந்த நாயைப் பார்த்து என்ன பார்க்கிறாய் அன்பே இல்லாத நாய்கள் சண்டை போட்டுக்கொண்டு ஒற்றுமை இல்லாமல் சாப்பாடு முன்னால் இருந்தும் சாப்பிடாமல் இருக்கின்றன. ஆனால் ஆடுகள் தாங்கள் சாகப்போகிறோம் என்று தெரிந்தும் ஒற்றுமையாக இருந்து புல்லைச் சாப்பிட்டன. இதுதான் உண்மையான அன்பு.

அன்பை அழுகப்படுத்தனும்
அன்பை அகலப்படுத்தனும்
அன்பை ஆழப்படுத்தனும்

அப்பொழுதுதான் ஒற்றுமை வலுப்படும். ஒற்றுமையாக முயற்சி செய்தால் முடியாத காரியம் கிடையாது. அதுதான் வெற்றிக்கான ஆதாரம்.

- தொடரும்........



# தித்திக்கும் தீபாவளி பண்டிகை!!!

எழுத்தாக்கம்- திருமதி.லீலாஸ்டீபன், மும்பை-78, செல்:022-40142398



பண்டிகை என்றாலே மனிதர்க்கு மகிழ்ச்சியும் குதூகுலமும் உண்டாகும் இந்தியாவில் இந்துக்களின் முக்கியமான பண்டிகைத் தீபாவளியாகும். தீபம்+ஆவளி=தீபாவளி. தீபங்களின் வரிசை என்பது இதன் பொருள். இந்துக்கள் மட்டுமல்லாது சமணர், சீக்கியர், ஜைனர், பவுத்தர்கள் என மற்ற மதத்தினரும் ஐப்பசி மாதம் வெவ்வேறு தினங்களில் பல ஆச்சாரங்களில் பலவிதமாகக் கொண்டாடுகின்றனர். தீபாவளிப் பற்றிப் புராணக்கதைகள் பல உண்டு. மகாலட்சுமி பாற்கடலில் அவதரித்த நாள் தீபாவளி என்பர். வடஇந்தியாவில் அசுர மன்னனான இராவணனை வீழ்த்தி ராமர் சீதையுடன் தனது ராஜ்ஜியமான அயோத்திக்குத் திரும்பிய நாளைத் தீபாவளியாகக் கொண்டாடுகின்றனர். வங்களாத்தில் காளிபூஜைத் தீபாவளியாகக் கொண்டாடப்படுகிறது. மண்ணாசை கொண்ட மகாபலி சக்ரவர்த்தியிடம் மகாவிஷ்ணு வாமன அவதாரத்தில் மூன்றடி நிலம் கேட்க, மகாபலியும் ஒப்புக் கொண்டார். வாமனரோ தனது வல்லமையால் மண்ணையும் விண்ணையும் அளந்த, மூன்றாம் அடிக்காக மகாபலியின் முதுகில் கால் வைக்க, அவன் பாதாள லோகத்துக்கு சென்றான். அவன் விஷ்ணுவிடம் ஆண்டுக்கொருமுறை தான் பூலோகம் வர வேண்டும் அன்று பூலோகவாசிகள் புத்தாடை அணிந்து விளக்கேற்றிக் கோலகலமாய்த் தன்னை வரவேற்க வேண்டும் என விண்ணப்பித்தான். விஷ்ணுவும் அதனை ஏற்றுக் கொண்டார். அந்த நாளைத் தீபாவளியாகக் கொண்டாடுகின்றனர்.

அடிப்படைக் கதையான நரகாசுரன் கதையே பெரும்பாலும் கொண்டாடப்படுகிறது. திருமாலுக்கும் பூமாதேவிக்கும் பிறந்தவன்தான் இந்த நரகாசுரன். இவன் தாய்சொல்லும் நல்ல விஷயங்கட்குச் செவி சாய்க்காமல் கடும் தவம் புரிந்து அசுரர்களுடன் சேர்ந்து கொண்டு முனிவர்கள், தபசிகள், தேவர்களைக் கொடுமைப்படுத்தினான். இவற்றை இந்திரன் கிருஷ்ணரிடம் முறையிட, அவர் நரகாசுரனை வதம் செய்து அழித்தார். அந்த நாளே தீபாவளியாகக் கொண்டாடப்படுகிறது. அன்று மக்கள் அதிகாலையில் நல்லெண்ணெய்த் தேய்த்து வெதுவெதுப்பான நீரில் நீராடிப் புத்தாடை அணிவார்கள். தற்காலத்தில் பலவித இனிப்பு பட்சணங்களைக்கடைகளில் வாங்குகின்றனர். இருப்பினும் அன்று எண்ணெய்ச்சட்டியில் பலவித பலகாரங்களைச் செய்வதுதான் மரபு. பலகாரங்களைத் தாங்கள் மட்டும் உண்ணாது வீட்டுக்கு வீடு பரிமாறிக் கொள்ள வேண்டும்.அந்த ஆண்டு துக்கம் நடந்த வீட்டில் பண்டிகைக் கொண்டாடமாட்டார்கள். அதனால் அனைவரும் அவர்களுக்கு பலகாரம் கொடுத்து அன்பையும் நட்பையும் பரிமாரிக் கொள்வார்கள். மதியம் மாமிச உணவு சமைத்து உறவினரோடு உண்டு மகிழ்வார்கள். இரவில் வீடுதோறும் மின்விளக்கு அலங்காரம் மட்டுமின்றி தீபங்கள் வரிசையாக ஏற்றப்படும். சிறுவர் முதல் பெரியவர் வரை பலவித பட்டாசுகளை வெடித்து மகிழ்வார்கள்.

அந்த ஆண்டுத்திருமணமானப் புதுமணத் தம்பதியருக்கு இது தலைத் தீபாவளி ஆகும். இது பெண்வீட்டில் நடக்கும். அவர்களுக்குப் புத்தாடை எடுத்துக் கொடுத்து கங்கா ஸ்ஞானம் முதல் அனைத்துச் சடங்குகளும் நடைபெறும். மாமனார் வீட்டு வசதிக் கேற்ப தங்கச் சங்கிலி, மோதிரம், பைக் கார் போன்றவற்றை மாப்பிள்ளைக்குப் பரிசளிப்பார்கள் மணப்பெண் புகுந்தவீடு திரும்பும் போது பலவித இனிப்பு வகைப் பலகாரங்களைத் தாராளமாக சீர்வரிசையுடன் அனுப்புவார்கள் தீபாவளிப் பண்டிகை இவ்வாறு சிரும்சிறப்புமாகக் கொண்டாடப்படுகிறது. இப்பண்டிகை ஐந்து நாட்கள் கொண்டாடப்படுகின்றது.

1.தந்தேராஸ்-இந்துக் கடவுளான தனவந்திரி வழிபாடு.

2.நரக சதுர்த்தி அல்லது ஜோதி வழிபாடு

3.லட்சுமி பூசை

4.கோவர்த்தன் பூசை

5.பாய் தூஜ்- சகோதரர் சகோதரிகளுக்கான உறவின் வெளிப்பாடு இவ்விதம் விமரிசையாகக் கொண்டாடப்படும் தீபாவளி இந்து மக்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது. பிற மதத்தவரும் தீபாவளிப் பண்டிகையில் கலந்து கொண்டு மகிழ்கிறார்கள். இம் மகிழ்ச்சியில் நம்மைச் சுற்றியுள்ள ஏழைகள், ஆதரவற்றோர், முதியோர் அவர்களை ஆதரித்தல் நமது கடமையாகும். இயன்றவரை அவர்களுக்குப் புத்தாடை உணவு, இனிப்பு வகைகளை வழங்கி அவர்களை மகிழ்வித்தல் சிறப்பானது. இதுவே தீபாவளிப் பண்டிகை கொண்டாடத்தின் உண்மையான மகிழ்ச்சியாகும். அனைவர்க்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!




கீழ ஈரால் அருள்மிகு காமாட்சி அம்மன் துணை

எம்.எஸ்.முத்துவேல் நாடார்,

போன்:9443742889. 7708701159.

சரவணன் ரியல் ஏஜென்சிஸ்

காமாட்சி ஸ்டோர்ஸ்

தலைவர் மாமல்லபுரம் வட்டார நாடார் சங்கம்

நிலம் வாங்க விற்க லேஅவுட் புரோமோட்டர் எண்:118/1, டி.கே.எம்.ரோடு, மாமல்லபுரம், பின்கோடு-603104.






19.9.2024 அன்று மாண்புமிகு மீன்வளத்துறை மீனவர்கள் நலம் மற்றும் கால்நடை துறையின் அமைச்சரும் எனது பாசமிகு அத்தானும் ஆகிய திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்தநாள் விழாவில் கோயம்பேடு மதுரவாயல் வட்டார நாடார் ஐக்கிய சங்கத்தின் காப்பாளர் பெப்சி வி.எஸ்.பாலமுரளி, பொதுச்செயலாளர் என்.ராமச்சந்திரன், அமைப்பு செயளாலர் ஜே.முத்து எனது இனிய நண்பர் மணக்கரை மு.மூர்த்தி அவர்களுடன் நானும் கலந்து கொண்டேன்.

ஆர்.எஸ்.பாண்டியன் நிறுவனர்.பாரத மாதா நண்பர்கள் அன்னதானக்குழு.

# தோல்வியை ருசியுங்கள்! வெற்றியை ரசியுங்கள்!! Aachi

## தொழில் மேதை.ஏ.டி.பத்மசிங் ஐசக் வெற்றிப் படிகள்

19.ஆச்சி ஒரு ஆரோக்கிய பல்கலைக்கழகம்!

ஆங்காங்கே பல்வேறு ராட்சத மெஷின்களில் வறுக்கப்படும் பொருட்கள் அனைத்தும் "பேட்சிங்" பகுதிக்கு வருகிறது. அங்குதான் ருசிக்கான முழுமையை அடைகிறது. அதாவது பிரியாணி மசாலாவில் பத்து விதமான பொருட்கள் சேர்க்கப்படுகிறது என்றால் பத்தும் தனித்தனியாக வறுக்கப்படுகிறது. சாம்பார் பொடியில் எட்டுவிதமான பொருட்கள் சேர்க்கபடுகிறது என்றால் எட்டும் தனித்தனியாக வறுக்கப்படுகிறது.

பிரியாணி மசாலாவுக்காக வறுக்கப்படும் 10விதமான பொருட்களையும் மிகத் துல்லியமான அளவில் சரியான விகிதத்தில் கலந்தால்தான் முழுமையான சுவையான சாம்பார் மசாலா கிடைக்கும்.

பிரியாணி மசாலாவுக்கும், சாம்பார் பொடிக்கும் எந்த அளவில், எத்தனை சதவிகிதத்தில் எது எதை கலக்க வேண்டும் என்ற சூட்சுமத்தில்தான் மசாலா நிறுவனத்தின் வெற்றி அமைந்திருக்கிறது. அதனால் "பேட்சிங் பிரிவு பரம ரகசியம் நிறைந்ததாக இருக்கிறது. அந்த பிரிவில் 25க்கும் மேற்ப்பட்டவர்கள் பணிபுரிந்தாலும் அந்த ரகசியத்தை காப்பாற்றும் முக்கியமான பொறுப்பு இரண்டு அம்மாக்கள் கைவசம் இருக்கிறது. அந்த அம்மாக்கள் இருவரையும் இயக்குவது தெல்மா ஐசக் அவர்கள்! இவர்கள் மூன்று பேரும்தான் சுவை ரகசியத்தை ஐசக் அவர்கள் இவர்கள் மூன்று பேரும் தான் சுவை ரகசியத்தை பாதுகாக்கிறார்கள். கோபி மஞ்சூரியன் மசாலாவாக இருந்தாலும், வத்தக்குழம்பு மசாலாவாக இருந்தாலும் அதில் ருசியில் சிறிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்றாலும் தெல்மா ஐசக்தான் அதை முடிவு செய்கிறார். பின்பு அது ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பிரிவின் விஞ்ஞான ரீதியான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்ட பிறகு அமல்படுத்தப்படுகிறது. பேட்சிங் பிரிவு பெண்மணிகள் இருவரும் அந்த பிரிவின் ரகசியத்தை காப்பாறும் முறை என்னை ரொம்பவே வியப்படைய வைத்தது. அந்த ரகசியம், ரகசியமாகவே இருக்கட்டுமே!



எந்த மசாலாவை, எத்தனை டன் தயாரிக்க வேண்டும் என்பதை முதல் நாளிலே அதற்குரிய துறை திட்டமிட்டுவிடுவதால், அதற்கு தக்கபடியான உணவு பொருட்களை சுத்தப்படுத்தி, வறுத்து பேட்சிங் செய்து, தூளாக்கி, பாக்கெட்டுகளில் அடைக்கிறார்கள். வண்ணமயமான பாக்கெட்களில் 8 கிராம் முதல் 10கிலோ வரை விதவிதமாக பேக் செய்யப்படுகிறது. எல்லாமே மெஷின்களில் மின்னல் வேகத்தில் தயாராகிறது.

லாரிகளில் மூலபொருட்களாக வந்து, தொழிற்சாலையில் விதவிதமான மசாலா பொருட்களாக தயாராகி மீண்டும் லாரிகளில் ஏற்றி, ஆச்சியின் மேல அயனம்பாக்கம் குடோனுக்கு செல்வதுவரை அனைத்தையும் பிரம்மிப்பாய் பார்த்துவிட்டு ஆச்சியின் அடுத்த தொழிற்சாலைக்கு பயணமானேன்!



கும்மிடிப்பூண்டி "சிப்காட்" தொழிற் பூங்காவில் பரந்துவிரிந்த இடத்தில் இயங்குகிறது. ஆச்சியின் மிளகாய்த்தூள், மல்லித்தூள் தயாரிக்கும் தொழிற்சாலை. உள்ளே நுழைந்தால் பச்சைப்பசேல் பூங்கா தென்படுகிறது. அழகான பூஞ்செடிகளில் மலர்கள் பூத்து குலுங்குகின்றன. மரங்கள் வளர்ந்து நிற்கின்றன. கரும்புகள் விளைந்து கண்களை பறிக்கின்றன. "தொழிற்பூங்கா என்ற பெயரில் பூங்கா பின்னால் இருந்தாலும், நிஜத்தில் பூங்கா தான் முதலில் அமைந்து, ஆச்சி தொழிற்பேட்டைக்கு அழகு சேர்க்கிறது.

பூங்காவை கடந்து உள்ளே சென்றால், என் சமூகம் உனக்கு முன்பாக செல்லும், என்ற வாசகம் அடங்கிய லாரிகள் வரவேற்கின்றன.

வழக்கம்போல் கேப், மாஸ்க் அணிந்து கொண்டு, உள்ளே நுழைந்தால், தாங்க முடியவில்லை.. மிளகாய் காரநெடி!

தினமும் நூற்றுக்கு மேற்பட்ட லாரிகளில் இருந்து காய்ந்த மிளகாய் ஒருபுத்தில் இறங்க, மறுபுறத்தில் அது சூப்பராக மிளகாய்த் தூளாக மாறிவிடுகிறது. பின்பு அழகழகாக பேக் செய்யப்பட்டு வெளியே செல்கிறது. உள்ளே செல்லும் முழுமிளகாய், தூளாகி வெளியே வரும் செயலாக்க முறையில் உலகத்திலே அதி நவீனமான இயந்திரங்களும், உற்சாகம் குறையாமல் செயல்படும் ஏராளமான மனிதர்களும் இணைந்து செயல்படுகிறார்கள். ஏராளமான ஆய்வுகளும், எக்கசக்கமான தர மேம்பாட்டு செயல்பாடுகளும் அங்கே நிகழுகின்றன. அவற்றை ஒவ்வொன்றாக சொல்கிறேன்.

ஆச்சி நிறுவனத்தார் இந்தியாவின் பல பகுதிகளில் இருந்து காய்ந்த மிளகாயை தரம் பார்த்து வாங்கினாலும், தொழிற்சாலைக்குள் இறக்கும் முன்பு லாரிகளில் வைத்தபடியே அதன் தரத்தை பரிசோதிக்கிறார்கள். நிறம் காரத்தன்மைஇரண்டும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு அவை சிறப்பாக இருந்தால் மட்டுமே அவற்றை லாரிகளில் இருந்து இறக்குகிறார்கள்.

அதன்பின்பு...

1.சுத்தப்படுத்துதல்: தோட்டத்தில் விளையும் மிளகாய் பறிக்கப்பட்டு, களத்தில் உலர வைத்து, அள்ளி எடுத்து கோணிகளில் நிரப்பப்பட்டு லாரிகளில் ஏற்றப்பட்டு இங்கு வந்தடைகிது. -தொடரும்.




AB

**Dr.M.Sundaralingam** B.SC.,B.VSC.,
PH:24895266 CELL: 9444015277

# ஆர்த்தி பிராய்லர்ஸ்

77, Nedunchezhian Street, (opp. M.G.R. Nagar Market)
M.G.R.Nagar, Chennai-78.

# நாடார் சமூகத்தின் போராட்ட வரலாறு

தொகுப்பு ஆசிரியர்:சு.செந்தமிழ்ச்செல்வன்
செல்:98412 26856.

**8.நாடார்களின் பிரிவுகள்**



17.வடக்கத்தி நாடார்:

வைப்பாறு நதிக்கு வடக்கே இருக்கிற நாடார்களின் பழக்க வழக்கங்கள் அந்நதிக்கு தெற்கே இருக்கிற நாடார்களின் பழக்க வழக்கங்களுக்கு ஒன்றுக்கு ஒன்று சற்று வித்தியாசமாக இருப்பதாலும், அவர்களுடைய உறவுமுறைகளும், மகமையும் ஒன்றுக்கு ஒன்று சம்பந்தமின்றி இருபாங்காய் நடந்து வருவதாலும், அந்நதிக்கு வடக்கே உள்ள தமிழ் நாடார்கள், "உத்திரமாற நாடார் அல்லது வடக்கத்தி நாடார் என்று அழைக்கப்பட்டார்கள். வடக்கு நாடார்கள் மதுரை, விருதுநகர், சிவகாசி பகுதியைச் சேர்ந்தவர்கள். வடக்கத்தின் நாடார்கள் தாங்கள் நாகரீகத்தில் சிறந்தவர்கள் என்று கூறிக்கொள்கிறார்கள்.

18).தெற்கத்தி நாடார்கள்:

வைப்பாறு நதிக்கு தெற்கே கன்னியாகுமரி வரை உள்ள தமிழ் நாடார்கள், "தக்கணமாற, உத்திரமாற நாடார், அல்லது தெற்கத்தி நாடார் என்று அழைக்கும் வழக்கம் இருந்தது. கிறிஸ்தவ நாடார்கள் முக்கியமாக தெற்குப் பகுதியில் வசிக்கின்றனர். இந்த நாடார்கள் மாநிலம் முழுவதும் சிதறிக்கிடக்கிறனர் தெற்கத்தி நாடார்கள் படிப்பில் முன்னேறி இருக்கிறார்கள்.

இவை தவிர கொங்கு நாட்டில் வேறு வகையாகவும், நாடார் சமூகத்தினர் பெயர் கொண்டுள்ளனர். இவர்களில் முக்கியமாக நான்கு பிரிவினர் உள்ளனர்.

19.கொங்கு நாடார் பிரிவுகள்:

கொங்கு நாடார்கள் நான்கு பிரிவினர்களாக இருந்ததாகக் கூறப்படுகிறது.

அ)மூப்பர்: கொங்கு நாடார்கள் ஊரில் எல்லா சிறப்பு நிகழ்ச்சிகளையும் முன்னின்று நடத்தினார்கள். இவர்கள் பெரும்பாலும் பனை ஏறும் தொழிலைச் செய்து வந்தார்கள். திருச்செங்கோட்டில் நாடார்களுக்கு என்று நகரின் நடுவே ஒரு மண்டபமும், மலை மேல் மண்டகப்படியும் உள்ளது.

21.இதர பிரிவுகள்:

1710 ஆம் ஆண்டில் வீரமாமுனிவரால் தொகுக்கப்பெற்ற சதுரகராதியில் சௌண்டிகார், துவசர், படுவர், பழையர் என்ற பெயரில் உள்ளவர்கள் கள் தொழில் புரிந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது கோபிசெட்டிப்பாளையம், சேலம் மாவட்டம், திருச்செங்கோடு, சங்கரி, ராசிபுரம் ஆகிய இடங்களில் வசித்து வருகின்றனர்.

நாடார்கள் மூப்பர், மூப்பனார் என்ற பட்டம் கொண்டதை கொங்கு பகுதியில் உள்ள திங்களூர் சென்னியம்பாளையம் மொட்டையப்ப நாடார் வகையறாவிடம் உள்ள திங்களூர் செப்பேடு கூறுகிறது. இச் செப்பேட்டின் படி, நாடார்களாகிய மூப்பனார்களுக்கு காணி நிலம், தேர் தொட்டுத் தரும் உரிமை போன்ற உரிமைகள் இருந்ததை அறியலாம்.

ஆ). கல்யாணி நாடார்:

சேலம் விவரச் சுவடியிலும், தஞ்சாவூர் நாள்வழி வெளியீட்டிலும் கொங்கு நாடார், கல்யாண நாடார் என்று இருபிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இராசிபுரம் தாலுகா குருசாமிப் பாளையத்திற்கு அருகில் "கல்யாணி" என்ற சிற்றூரில் இவர்கள் வாழ்கின்றனர். மிகக் குறைத் அளவில் விவசாய நிலம் உடையவர்கள் இவர்களில் பலர் பனை ஏறும் தொழிலை நம்பி வாழ்ந்து வந்தனர். பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையினர் என்று தெரிகின்றது.

இ) மருத நாடார்கள்:

மருத நாடார்கள் சோழ நாட்டிலிருந்து குடியேறியதாக கூறப்படுகிறது. ஈரோட்டை அடுத்து உள்ள பூந்துறையில் வசிக்கின்றனர். பனை ஏறும் தொழிலை முதன்மையாகவும், செங்கல் உற்பத்தி, நெசவு, ஆடு வளர்ப்பு, வீடு கட்டும் பணி, கூடை முடைதல், தச்சுத் தொழில் முதலியவற்றிலும் ஈடுபட்டுள்ளனர். பொருளாதாரத்தில் மிகப் பின்தங்கிய நிலையினர் என்று தெரிகிறது.

ஈ) நட்டுவ நாடார்:

மதுரை விசுவநாத நாயக்கர் ஆட்சிக் காலத்தில் அடக்குமுறைக்கு ஆளான நாடார்களில் ஒரு பிரிவினர் ஸ்ரீ வைகுண்டத்தைச் சேர்ந்த பண்ணைவினை என்ற ஊரின் அருகில் உள்ள "நாட்டத்தி" கிராமத்தை விட்டுக் குடிபெயர்ந்து, கொங்கு நாட்டில் குன்னத்தூர் அருகில் உள்ள வெள்ளையம்பாதி என்ற கிராமத்தில் குடியேறினர். இன்னொரு பிரிவினர் காங்கேயம் அருகில் உள்ள ஒளப்பாளையத்திலிருந்து இரண்டு மைல் தொலைவில் வடக்கே வீர சோழபுரத்தில் குடியேறினர். காலப் போக்கில் தொழில் தொடர்பாக நஞ்சுண்டபுரம், அயோத்தியாப்பட்டணம் ஆகிய ஊர்களுக்கு சென்றனர். முதலில் குடியமர்ந்த நட்டாத்தியை விட்டுக் குடி பெயர்ந்து வந்ததால் இவர்களை "நட்டுவார்" என்று அழைத்தனர்.

ஸ்ரீ முருகன் துணை
ஸ்ரீ ஐந்துவீட்டு சுவாமி துணை

செல்:94980 75679, 9445227158, 9677060358.

தூத்துக்குடி மாவட்டம், செட்டியாபத்து வாக்கியம்
பஞ்சாங்க கணிதர் ஜோதிடர் K.M.துரைசாமி
நாடார் மகன் ஜோதிடர் C.T.சிவக்கொழுந்து
வேல் மகள்

ஸ்ரீ தேவி ஜோதிட நிலையம்

திருவல்லிக்கேணி, சென்னை-5, ஆன்லைன்-லில்
ஜாதகம் பார்க்கப்படும், வாட்சஆப்:94980 75679.




# சிவந்தி ஆதித்தனார் சாதனை சரித்திரம்

பத்மஸ்ரீ டாக்டர் சிவந்திஆதித்தனார் சாதனைச் சரித்திரம் அ.மா.சாமி.

**பெரியன செய்த பெரியோன்**

வாழ்க்கையின் பெரும்பகுதி:

விளையாட்டுகள், விளையாட்டுக் கல்வியில் சிவந்தி ஆதித்தனாரின் ஈடுபாடு உண்மையாகவே ஈடுபாடு உண்மையாகவே ஈடு இணையற்றவை. தனது வாழ்க்கையின் பெரும் பகுதியை தனது உடல், பொருள், ஆவியை இதற்காகச் செலவிட்டார். இதில் அவருக்கு இணையாக வேறொருவர் இல்லை.

பொறுமையாகக் கேட்பது, ஒட்பிட்டுப் பார்ப்பது, அறைகூவல்களை ஆண்மையுடன் எதிர்கொள்ளுவது, எதிரிகளை எடைபோடும் ஆற்றல், வெறி பெறவேண்டும் என்ற ஊக்கம், அசைக்க முடியாத உறுதி, தளராத தன்னம்பிக்கை, ஒழுக்கம், குறிக்கோள் அதை அடையத் திட்டமிடுதல், செயலாற்றுவதில் விடாமுயற்சி அஞ்சா நெஞ்சம், கண்டிப்பு, கனிவு, உள்ளன்புடன் பழகுதல், முன்மாதிரியாக நடத்தல் முதலிய குணங்கள் அவரை சிறந்த நிர்வாகி ஆக்கின. அவரிடம் பொய்யோ, போலித்தனமோ கிடையாது.

நிர்வாகம் என்பது அவருக்கு ஒரு கலை. நிர்வாகத்தில் அறிவியலைப் புகுத்தினார். இது நிர்வாகத்தில் வெற்றி பெற அவருக்கு உதவியது.

தினத்தந்தியில் கிடைத்த வெற்றி எந்த நெருக்கடியையும் சமாளிக்க அவருக்குக் கைகொடுத்தது.

விளையாட்டுகள் பற்றியும், அதன் வரலாற்றையும் நன்கு தெரிந்து வைத்திருந்தார். இது எளிதாக நிர்வாகம் செய்ய உதவியது.

விருதுகள்:

சிதறிக் கிடந்த இந்தியக் கைப்பந்துக் கழகத்தை ஒன்றுபடுத்த இவர் எடுத்துக்கொண்ட முயற்சி, ஆசிய கைப்பந்துக் கழகம், சர்வதேச கைப்பந்துக் கழகம் ஆகியவற்றின் கவனத்தை ஈர்த்தது. அவை விருதுகள், பதக்கங்கள் கொடுத்து இவரைப் பாராட்டின. பேங்காக்கில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கு இந்திய அணியைத் தலைமை தாங்கி அழைத்துச் செல்லக்கூடிய சிப்பையும் அளித்தது. அங்கு 28 பதக்கங்கள் பெற்றதற்கு இவரது நிர்வாகத் திறமையே காரணம்.

உலக விளையாட்டு அரங்கில் இந்தியாவை இடம் பெறச் செய்த சிறப்பு சிவந்தி ஆதித்தனாருக்கு உண்டு. இந்தச் சிறப்புதான் அவருக்குப் பல்கலைக்கழகங்களின் “டாக்டர்” பட்டத்தையும். மத்திய அரசின் பத்மஸ்ரீ விருதையும் பெற்றுக் கொடுத்தது.

இந்தியக் கைப்பந்து அணி உலக அரங்கில் முதலிடம் பெற வேண்டும் என்ற அவரது கனவு அவரது நிர்வாகத் திறமையால் நிறைவு ஆயிற்று.

நண்பன் போல:

விளையாட்டு வீரர்களுடன் நண்பனைப் போலப் பழகினார். அவர்கள் வெற்றி பெற்றபோது மட்டுமல்ல, வெற்றியைத் தவற விட்டபோதும் வெற்றியும் தோல்வியும் வீரனுக்கு அழகு என்று அவர்களைத் தட்டிக்கொடுத்தார். அவர்களின் தேவையை உணர்ந்து உதவினார். விளையாட்டு வீரர்களுக்கு அரசாங்கமோ, வேறு யாருமோ உதவாதபோது, இவர் முன்வந்து உதவினார் இவரது உதவி எப்போதுமே தாராளமாக இருக்கும்.

மற்றவர்களுக்கு முன்மாதிரியாக விளங்கினார். தலைவன் என்று தனித்து நிற்பது இல்லை. இவர் நாற்காலித் தலைவர் அல்ல. வீரர்களுடன் கலந்து பழகினார். வீரர்களை எப்போதும் மகிழ்ச்சியுடன் வைத்திருந்தார்.

பொறுப்புகளை பகிர்ந்து அளித்தார். அவர்கள் சீராகச் செய்து முடிக்கப் பழக்கினார். அவர்கள் தங்கள் தலைவரின் வெற்றிக் கொடி பட்டொளி வீசிப் பறக்கச் செய்தார்கள்.

சில ஏமாற்றங்கள், அதிர்ச்சிகள் இல்லாமல் இல்லை. ஆனால் இவருக்கு எதையும் தாங்கும் இதயம் இருந்தது. இடைவிடாத முயற்சியால் ஏமாற்றங்களையும் நல்ல மாற்றங்களாக மாற்றினார்.

எவரையும் பகைத்துக்கொள்ளமாட்டார். “மறப்போம், மன்னிப்போம்” என்ற மனப்பான்மை கொண்டவர். அதனால்தான் அவர் அசாதாரண மனிதராக விளங்கினார்.சிவந்தி ஆதித்தனார் சிறந்த தலைவராகத் திகழ்ந்தார். பல துறைகளில் அவர் முன்னோடி. பல காலம் நினைக்கத்தக்க சாதனையாளர். தான் பொறுப்பேற்ற இடங்களில் எல்லாம் முத்திரை பதித்தவர். -தொடரும்....

# கேள்வி? பதிலில்?...... முதியோர் நல மருத்துவம்

பத்மஸ்ரீ டாக்டர்.வி.எஸ்.நடராஜன், மூத்த முதியோர் நல மருத்துவம்.044-26412030.

## காது, மூக்கு, தொண்டை

✱ **கேள்வி:** தற்பொழுது எனக்கு இரண்டு காதுகளிலும் ஒரே இரைச்சலாக இருக்கிறது. இது வரை எந்த நோயும், மருந்தும் இல்லாமல் நன்றாக இருக்கிறேன். எதனால் காதில் இரைச்சல் ஏற்படுகிறது?

✱ **பதில்:** வெளிப்புற சப்தங்கள் இன்னும், காதிகுள் ஏற்படும் ஒருவித சப்தத்தைத் தான் காது இரைச்சல் என்கிறோம். இரைச்சல் தொடர்ந்து இருக்கலாம் அல்லது விட்டு விட்டும் வரலாம். காது கேளாமை, காதில் மெழுகு அடைப்பு, உட்காது பாதிப்பு, நாள்பட்ட நோய்தொற்று மற்றும் மருந்துகள் ஆகியவை காது இரைச்சல் வரக் காரணங்களாகும். காது இரைச்சலுக்கு சிகிச்சை அளிப்பது மிக கடினமானது மட்டுமல்ல சற்று ஏமாற்றம் அளிப்பது கூட. காது இரைச்சலுக்கான காரணத்தைக் கண்டறிய காது, மூக்கு, தொண்டை மருத்துவரை ஆலோசிக்கவும். சிகிச்சை முறைகளினால் தக்க பயன் அளிக்கவில்லை என்றால் காது இரைச்சலை ஒரு நண்பனாக ஏற்றுக் கொண்டு வாழ்வதே ஒரு சிறந்த வழியாகும்!

✱ **கேள்வி:** எனக்கு மூக்கிலிருந்து அடிக்கடி ரத்தம் வருகிறது. அப்பொழுது மிக்க பயம் ஏற்படுகிறது. சிகிச்சைக்கு பிறகு சரியாகி விடுகிறது. இது எதனால்?

✱ **பதில்:** மூக்கிலிருந்து ரத்தம் வருவதற்கு பல காரணங்கள் உண்டு. அவை.

❖ மூக்கில் அடிபடுதல்.

❖ மூக்கினுள் கல், ஊசி போன்றவை போகும் போது.

❖ மூக்குச் சளி

❖ ரத்தம் உறைவதை தடுக்கும் மாத்திரைகள் (உ.ம்:-ஆஸ்பிரின் குளோப்பிகிரல்)

❖ அலர்ஜி

❖ மூக்கெலும்பு அதிகமாக வளரும் பொழுது

❖ உயர் ரத்த அழுத்தம் அதிகரிக்கும் பொழுது

❖ ரத்தப் புற்றுநோய் மூக்கின் உட்புறம் உள்ள ரத்தக் குழாய்கள் உடைவதனால்தான் ரத்தக் கசிவு ஏற்படுகிறது. இவ்வாறு ரத்தக் கசிவு ஏற்படும்போது, மூக்கை ஐந்து முதல் இருபது நிமிடங்கள் வரை அழுத்திப் பிடித்தால் இது நின்றுவிடும். மேற்கூறிய முறையில் ரத்தம் வருவதைக் கட்டுப்படுத்த முடியவில்லை எனில் உடனே மருத்துவரை அணுகவும்.

✱ **கேள்வி:** எனக்கு 77 வயதாகிறது. காது சரியாக கேட்கவில்லை என்று என் பேரன் (17வயது) டாக்டரிடம் அழைத்துச் சென்றான். அவர் என்னைப் பரிசோதனை செய்துவிட்டு, வயதாகிவிட்டதால் காதில் சப்தம் கேட்கும் திறன் குறைந்துவிட்டது. அதற்கு ஒரே வழி, காது கேட்டும் கருவியைப் பொருத்திக் கொள்ள வேண்டும் என்றார். இந்த வயதில் இது எல்லாம் தேவையா? எனக்கு இதில் கொஞ்சம் கூட விருப்பமில்லை. கருவியை பொருத்திக் கொள்ள இஷ்டமில்லை என்று கூறிவிட்டேன். முதியோர் மருத்துவர் என்ற முறையில் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்.?

✱ **பதில்:** உங்கள் கேள்வி எனக்கு சிரிப்பைத்தான் தருகிறது. காது கேட்கும் கருவியை இந்த வயதில் (77) பொருத்திக் கொள்ளாமல், பேரன் வயதிலா (17) பொருத்திக்கொள்வது? ஒலி தெளிவாகக் கேட்காததால் மற்றவர்களோடு இயல்பாக பேச முடியாது. தொலைக்காட்சி பார்ப்பது, அலைபேசியில் பேசுவதைக்கூட கொஞ்சம் கொஞ்சமாகத் தவிர்க்கப் பார்ப்பீர்கள். ஒரு தாழ்வு மனப்பான்மையால் தனித்தே இருக்க விரும்புவீர்கள். தனிமை, மனச்சோர்வு, காதுகேளாமை ஆகியவை ஒன்றோடு ஒன்று சேர்ந்து மறதி நோய் வர வாய்ப்பு அதிகரிக்கும். குடும்பத்தினரும் உங்களிடம் பேசுவது சிரமம் என்ற எண்ணி, பேசுவதைக் கொஞ்சம் கொஞ்சமாக தவிர்ப்பார்கள். இத்தனை தொல்லைகளிலிருந்தும் விடுபட ஒரே வழி காது கேட்கும் கருவியைப் பொருத்திக் கொள்வதுதான். மவ்ர்கள் ஒரு மாதிரியாக பார்ப்பார்களே என்று எண்ண வேண்டாம். நமது பிரச்சனைகள் மற்றவர்களுக்குத் தெரியாது. நம் பிரனைக்க நாம்தான் தீர்வு காண வேண்டும். கண் பார்வை குறைந்தால் கண்புரை அறுவை சிகிச்சை செய்து கொண்டு கண்ணாடி போட்டுக் கொள்வது போல, காது கேளாமை இருந்தால் காது ஒலி கேட்கும் கருவியை பொருத்திக் கொண்டு வாழும் நாட்களில் மற்றவர்களோடு இனிமையாக பழகி நலமுடன் வாழலாமே!

**-தொகுப்பு: - எல்மாமதி..**




# அமிர்தகனி

## திருமண தகவல் நிலையம்



**நாடார் சொந்தங்களுக்கு மட்டும் 9840948727.**

**தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டகளை பிறப்பிடமாக கொண்டு, இங்கு வாழும் அனைத்து வகை நாடார் சமூகத்தினருக்கும் வரன் பார்த்து கொடுக்கப்படும்.**

**மண் பொருத்தம், மனைப்பொருத்தம், மணப்பொருத்தம் இவை மூன்றுமே திருமணத்திற்கு போதுமானது.**

**எண்:5, 3வது தெரு, வள்ளலார் நகர், திருமுல்லைவாயல், சென்னை-600 063.**

நேரம்:புதன், வியாழன், வெள்ளி மாலை 5மணி வரை.

# மானாடும் மானாட்டாரும்: கி.பி.1600 விடியலிலிருந்து-18

டாக்டர் ஆ.தசரதன் 9444169603.

நாடார்களின் வரலாற்றில் ஒரு பகுதியாகிய கி.பி.1600 முதல் 1700 வரையிலான ஒரு நூற்றாண்டு வரலாற்றை அறிந்து கொள்வதற்கான கல்வெட்டு, செப்பேடு, ஓலைச்சுவடி மற்றும் பிற ஆவணங்களை இதுவரை பார்த்தோம்.



இவ் ஆவணங்கள் பெரும்பாலும் பாண்டிய நாட்டில் மானவீர வளநாடு என வழங்கப்பெற்ற மானாட்டில் கிடைக்கின்றன. சோழநாட்டில் திருவிடைமருதூர் செப்பேடும் கொங்குநாட்டில், கருமாபுரம், அவல்பூந்துறை, திருமுருகன்பூண்டி ஆகிய இடங்களில் உள்ள சான்றோர் குல மடங்களில் கிடைக்கும் செப்பேடுகளும் கி.பி.17ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டவை. சில ஓலைச்சுவடிப் பாடல்களும் இக்காலக்கட்டத்தன.

மானாட்டு ஆவணங்களோடு தொடர்புள்ளதாக இப்பட்டயங்கள் உள்ளன. அண்மையில் தொல்லியல் அறிஞர் எஸ்.இராமச்சந்திரன் அவர்கள் களப்பணி மூலம் கண்டறிந்த திருவெண்காட்டுப்பட்டயமும் இவை போன்றவை தாம் ஆயினும், இத் திருவெண்காட்டில் உள்ள சான்றோர்குல மடமும் பட்டயமும் மேலும் ஆராயத் தக்கவை.

கி.பி.17ஆம் நூற்றாண்டில் மானாடு எனப்பெறும் மானவீரள நாடும் அதைச் சுற்றி அமைந்துள்ள பெரும்பாலான சான்றோர் குலத்தினரின் ஊர்களும் ஆவணங்களில் பதிவு பெற்றிருப்பதற்கு அப்பாலும் மானாட்டுச் சான்றோர் குலத்தினர் மற்றும் அப்பகுதிகள் கி.பி.17ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே அடையாளப்பட்டிருப்பதற்கான சான்றுகளை இனிக் காணலாம்.

மாறநாடு என்னும் மானவீரர்கள் குடி அமர்ந்ததால் ஏற்பட்ட வளநாடு என்றும் இவை திரிந்து மானாடு என வழங்கப்பெற்றும் அதில் வாழ்ந்த பெரும்பாலோர் படைவீரர்களாகப் பணியாற்றி, போர்ப்பணி அற்றுப்போன காலக்கட்டத்திற்குப் பின் பாண்டிய நாட்டில் ஏற்பட்ட பாளையப்பட்டுகளில் வணிகம் தொடர்பாகவும், கிழக்கும் தெற்கும் மேற்குமாகப் பல ஊர்களில் வணிகம் மற்றும் விவசாயம் தொடர்பாகவும் குடியேறிய மானாட்டார் எனப் பெயர் பெற்றுள்ளனர்

இவர்களில் பெரும்பாலோர் அய்யனார் தெய்வங்களை வணங்கி வருபவர்கள் ஆவர். ஏனைய குலதெய்வங்களும் வணங்கப் பெற்று வருகின்றன.

மானாட்டார்களின் வகையறாக்களைக் களப்பணி மூலமே கண்டறிய முடியும். இவர்களின் முன்னோடிகள் சிலர் மானாட்டு விளைபடு பொருள்களை முதலில் பொதிமாடுகளில் ஏற்றிவிற்றும் பின்பு மாட்டுவண்டிகளில் கொண்டு சென்று விற்றும் பின்பு தாம் விற்ற இடங்களில் நிலங்களை வாங்கிக் குடியிருப்புகளை அமைத்தும் விற்பனைப் பேட்டைகளை உருவாக்கியும் செயல்பட்டனர்.

நாளாக நாளாக இவர்களின் தொழில்களும் குடியிருப்புகளும் உறவு முறைகளும் பல்கிப் பெருகி, அடுத்து வந்த நூற்றாண்டுகளில் பொருளாதாரத்திலும் தொழில்களிலும் மேம்பாடு அடைந்துள்ளனர்.

இப்படியான மானாட்டினரின் தெய்வங்கள் மற்றும் சமூகப் பண்பாட்டுப் பழக்க வழக்கங்களை எழுதவும் பேசவும் ஏராளமான பக்கங்கள் தேவை.

மானாட்டார்கள் வரலாற்றுக் காலத்தில், அதாவது கி.பி.1600 க்கு முன்பாக மானவீரப் பராந்தகம் செய்த நாட்டார்கள் என அடையாளப்பட்டுள்ளனர் சிலர். பராந்தகம் என்றால் சட்டம் என்று பொருள் இச் சட்டத்தை மீறுவோர் தண்டனைக்கு உள்ளாவர் என்பது கல்வெட்டு வாசகம்.

கி.பி.11ஆம் நூற்றாண்டில் சுந்தர சோழபாண்டியனின் 16ஆம் ஆட்சி ஆண்டில் சேரன்மாதேவி மன்னார் கோவில் கல்வெட்டில், "மானவீரப் பராந்தகம் மறுத்தார். படுந்தண்டம் படுவதாக" என வருவது மானாட்டார் இட்ட சட்டமாகும் எனத் தெரிகிறது.

நெல்லை நெடுமாறன் அவர்கள், "மானவீரப் பராந்தகம்" என்ற சான்றோர் நீதிபற்றி இக்கல்வெட்டில் அறிகின்றோம். இதற்கு, "ஈழத்தண்டம்" என்ற மற்றொரு பெயரைக் கூர்மபுராணம் குறிப்பிடுகிறது. கொங்கு நாட்டுக் கல்வெட்டு "தண்ட ஈழம்" என்கிறது. பௌத்த நூல்களில், "நீதி செய்த அந்தணர்கள் சாணதண்டப் பிராமணர்" என்று அழைக்கப்பட்டுள்ளனர். மிகவும் போலியான செய்திகளைத் தருகின்ற தாளில் அண்மைக்காலம் எழுதப்பெற்ற சோழன் பூர்வ பட்டயத்தில் "மானாட்டு வெள்ளோட்டுப் பட்டோலை" என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. "மானாட்டான் வழக்கு"என்ற சொல் இன்றும் தென்பாண்டி நாட்டில் வழக்கில் உள்ளது எனத் தம் நூலான நாட்டார் நாடாக்கள் (2020:பக்:77) என்ற நூலில் எழுதியுள்ளார்.

மானவீரப் பராந்தகம், ஈழத்தண்டம், சாணதண்டம் மானாட்டு வெள்ளோட்டுப் பட்டோலை, மானாட்டான் வழக்கு என்பவற்றோடு சான்றோர் குலத்தினரின் மூழிக்களக் கச்சம் என்பதையும் இணைத்துப் பார்த்தால், மானாட்டார் உள்ளிட்ட சான்றோர் குலத்தினர் சட்டதிட்டங்களை உருவாக்கியுள்ளனர் என அறிந்துகொள்ளலாம்.

நெல்லை நெடுமாறன் அவர்கள் மேலும் அந்த நூலில் எழுதுவதாவது:

மானவீர வளநாட்டிற்கு மாநாடு என்ற மற்றொரு பெயர் உண்டு. இதனால் மானவீரவளநாட்டாரை மாநாட்டார் என்ற அழைக்கும் வழக்கு உண்டு. மானாட்டார் சாலை என் பெருவழி இருந்ததை நாட்டுப்புற இலக்கியங்களால் அறிகின்றோம். மாநாட்டார் பற்றி எட்கர்தர்ஸ்டன் எழுதிய சாதி நூல் விளக்கம் தருகிறது என்கிறார்.

நெல்லை நெடுமாறன் அவர்கள் எழுதிய மற்றொரு நூலான நாடார்களின் நாடுகள் (2020, பக்:87) என்ற நூலில், "நாடாள்வார்கள் குடியில் மாநாட்டார், மேல் நாட்டார் என்ற சமூகக் கிளைகள் இருந்ததை எட்கர்தர்ஸ்டன் குறிப்பிடுகிறார்" என்கிறார்.

இவ்வாறான வரலாற்றுச் சான்றுகளால் மானாட்டாரின் தொன்மையும், வலுவும், வழக்கும் தெரியவருகின்றன.

சேரநாட்டிலும் சோழநாட்டிலும் பாண்டிய நாட்டிலும் ஈழத்திலும் வடநாட்டிலும் சான்றோர் குலத்தினர் ஈட்டிய சட்டதிட்டங்கள் வழக்கிலிருந்தன என மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் தெரியப்படுத்துகின்றன.

மானாட்டில் பனைகள் மிகுந்திருந்தன என்றும் சான்றோர் குலத்தினர் பலர் பனை ஏறிப் பிழைத்தனர் என்றும் அவர்கள் சாணார் என்றும் கொச்சைப் படுத்திப் பேசும், எழுதும் நபர்கள், மானாட்டார் போர் வீரர்கள் என்பதையும் மேற்சுட்டிய பெருமைகள் உடையவர்கள் என்பதையும் அறிந்தால், தம் கருத்துகளை மாற்றிக்கொள்வார்கள் அல்லவா!

மானாட்டார்கள் கி.பி.1700 ஆம் ஆண்டு வாக்கில் மானாட்டிலிருந்து கொஞ்சங்கொஞ்சமாக வேற்றிடங்களுக்குச் சென்றனர் என்றும் அவர்கள் கி.பி.18ஆம் நூற்றாண்டில் காலூன்றியபின்பே, கி.பி.19ஆம் நூற்றாண்டில் தம்மை வெளிப்படுத்தத் தக்க ஆவணங்களை அடையாளங்களை உருவாக்கினர் என்றும் தொடர்ந்து காணலாம்.



தமிழ்நாடு வணிக சங்க பேரவை தலைவர் த.வெள்ளையன் அவர்களுக்கு புகழ் அஞ்சலி!!

# S.P.ஹார்டுவேர்ஸ் & பெயிண்ட்ஸ், பைப், எலக்ட்ரிக்கல்ஸ் & டூல்ஸ்

**பெயிண்ட்ஸ், போர் பிட்டிங்ஸ், கதவு, பிளைவுட், பைப், எலக்ட்ரிக்கல்ஸ் &பவர் டூல்ஸ்**




4/சி-1, பனகல் ரோடு, திருவாரூர் -610 001.
செல்:9487754226. 9842739226.

---

வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர் (சங்கீதம்:65-1)

**M.Rajan** **Mob:9380198606**
**9840167595**

# ஆவடி ராஜ் பர்னிச்சர்







**வீடு மனை வாங்க விற்க இங்கு அணுகவும்**
எண்:246, New Military Road, Avadi, Chennai-54.
(Kanikapuram Bus Stop)

# பனைமரம்

தொகுப்பு:M.செசிலிஸ்டீபன்
இராஜாவூர், செல்:9486356746

## மரம் வளர்ப்போம் பசுமை நிற பனைமரம் வளர்ப்போம் தமிழக பசுமை பனைமர செழுமையே!!!

பனை வேந்தியர் குலம் ராஜகுலம்.
பனைமரமே சிம்மாசனம்.
முறுக்கு தடி செங்கோலாம்!
தலைநாறு தலை மகுடம்
பாளை இடிக்கி உறைவாளாம்
பனம் பத்தை நெஞ்சி கவசம்
பனம் பத்தையில் ஆணழகன் காலணியாம்!
பனம் ஓலையில் பெண்களுக்கு காலணியே!
கருமைநிற அடர்ந்த மீசை வீர முரசாம்
குடுக்கையே குடுக்கை அது நீர் கசியா
காற்று கசியா குடுவை குடுக்கையே!
பனைத் தொழிலே வருட முழுதும்
பனையாளியின் சுய தொழிலாம்
முறுக்கு தடியே நீ என்னை தூக்க,
உன்னை நான் தோளில் சுமந்து வருவேன்.
பாளை அரிவாளே நீ மிக கூர்மையான கருவி
பாளையை மட்டுமா நீ சீவுவாய்,
என் தாடியை சவரம் செய்வதும் நீ தானே
உன் கூர்மையை என் சொல்வது!
பதநீர் காய்ந்த கூழ்பயினியே!
அகப்பையில் மோர்ந்து இட்டிலி தோசை
கஞ்சி குடிக்க சுவையே சுவை!
உன் சுவைக்கு ஈடில்லையே வேறு சுவை
நீயே தேனமுதானாயோ!!
சுண்ணாம்பு கலந்த பதநீரே!
உன்னை பருக எந்த ஒரு எதிர் நோயும் வருவதில்லை!!
பதநீர்காய்ந்து கொதித்து பொங்க
தேங்காய் சிரட்டையில்இடித்து சித்தாமணக்கு பொடிதூவ
பொங்கி விழும் கொதி பதநீர் அமர்ந்துவிடும்.
உன் சுவையை நினைத்தாலே
நாவிலும் வாயிலும் வாய்நிறைய
சுரப்புநீர் சுரந்து நிறையுதே!
பனஞ்சோலை அன்னியரிடம் பாதுகாக்க
பனை உச்சி சிம்மாசனம்
வேந்தியரால் வேவு காணும்
கண்காணிப்பு வேவுகணை கோபுரமாம்!
தமிழ்நாட்டு மண்ணின் மரமே
பயனுள்ள பசுமை நிறை
கற்பக விருட்சமே!பனை சோலை நரி,
சலசலப்புக்கு அஞ்சாதே
பனைமரம் காப்போம்
பசுமையை பேணுவோம்

**கருப்பட்டிகாய்த்தல் 18ஆம் நூற்றாண்டின் திராவிட மொழியான் தமிழ்மொழி அதன் பதிப்பகம் ஓலைச்சுவடி தொல்காப்பியம், பலராமன் நாட்டி கொடி பனைமரச் சின்னம். தமிழுக்கு நவீன வாழ்வு**

தமிழ் மண்ணின் பனைமரமே பயனுள்ள
கற்பக விருட்சமே!!!

பதநீர் காய்ப்பு: கூழ்பயினி-கற்கண்டு-கருப்பட்டி.

பதநீர் காய்க்கும் போது நீர்வற்றி முதற்பருவம் கேசரி நிறத்தில் மாறும் அதை நீண்ட அகப்பை கணை கொண்ட தென்னஞ்சிரட்டை அகப்பையாலோ அல்லது பனைமட்டை துடுப்பத்தாலோ கிளரிக்கொண்டேயிருப்பார்கள் அல்லாவிட்டால் பதநீர் கொதித்து பொங்கி வழிந்துவிடும். இவ்வாறு பதநீர் பொங்கி வழியும் நிலையில் தேங்காய் சிரட்டையில் இடித்து வைத்திருக்கும் சித்தாமணக்கு பொடியை இரண்டு விரல் கொண்டு ஒரு சுட்டி எடுத்து கொதிக்கும் பதநீரில் போடுவார்கள். உடனே கொதித்து பொங்கி வழியும் நிலையிலிருக்கும் கொதிபதநீர் அமர்ந்துவிடும். கொதித்து பதநீர் அகப்பையில் நூல்போல் வடிந்தால் அது கம்பி பருவம் இது கூழ்பதநீர். இந்த பருவ கூழ்பயினி புட்டு, தோசை, கஞ்சி குடிக்க விருப்பமானது. தொடர்ந்து சூடாக்கினால் அடுத்த பருவம் அகப்பையிலிருந்து விழும்போது பார்த்தால் சொட்டு சொட்டாக விழும் இது ஒத்தை துளிபருவம் இந்த பருவத்தில் ஆறவைத்து பானையை நன்றாக மூடி துணியை வைத்து கூட்டி அறங்கு வீட்டில் (மண்வீடு) ஒரு பக்கத்தில் குழி தோண்டி வைத்து ஒரு மாதம் இரண்டு மூன்று மாதம் கழித்து திறந்து பார்த்தால் சரல் கற்கண்டு, கல் கற்கண்டாக கிடைக்கும் சாப்பிட்டு மகிழலாம். அப்படியே ஒத்தை துளி பக்குவத்திற்குப் பின் தொடர்ந்து காய்ச்சி அகப்பையில் கோரி ஊற்றி பார்த்தால் அடுத்த பருவம் சடைபருவம் இதில் துளி துளியாக விழாமல் துளிகள் சேர்ந்து சடையாக விழும் இப்போது கருப்பட்டிக்கு பக்குவமான பருவம் பானையை கீழே இறக்கி மட்டை துடுப்பை வைத்து துலாவி துலாவி கொண்டிருக்க கருப்பட்டி மாவு பருவம் வரும். உடனே மண்ணின் மேல் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் தென்னை சிரட்டைகளில் ஊற்றி அரை மணி, முக்கால்மணி நேரம் கழித்து பார்த்தால் கருப்பட்டியில் அதிகபடியான நீர் சிரட்டைகளின் ஓட்டை வழியாக கசிந்து மண்ணில் போய்விடும். கருப்பட்டி சிரட்டைகளின் அச்சியில் தயாராகி இருக்கும். பனை ஓலை கடா பெட்டியில் கருப்பட்டி சிரட்டையை தட்ட கருப்பட்டி வடிவத்தில் விழும். சுவையான கருப்பட்டி ஆகிவிடும்.

பல நூறு ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட ஓலைச் சுவடிகள் 18ஆம் நூற்றாண்டில் பழந்தமிழரின் தமிழான திராவிட மொழியை அதன் பதிப்புகளை ஓலைச் சுவடி பனை ஓலை சுவடி வழியாக நமக்கு அறியவைத்த பனைஓலை பனை மரம் போற்றி! திராவிட மொழியை தன்னுள் பதிப்பித்து உயிர் கொடுத்து மறு பிறவிக்கு காரணமானது, பனைமரப்பனை ஓலை. ஓலைச் சுவடி. பண்டைய தொல்காப்பியம் படைத்த சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, பத்துப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, தமிழன் சொல்லியல், தமிழர் வாழ்வியல், மணிமேகலை கொண்ட ஐம்பெரும் காப்பியங்களை ஏடுகள் ஓலைச் சுவடிகள் பனைமரம் கொடைகள் 18ஆம் நூற்றாண்டில் அச்சிட்டு நம் தமிழ் உயிர் புத்துயிர் பெற ஓலை சுவடி ஏடுகளில் பதிக்கப்பட்ட பொன் பொறிகள்தான் தமிழுக்கு நவீன வாழ்வு அளித்தது. பலராமன் தன் நாட்டு கொடிக்கு பனைமரம் சின்னமாக வைத்திருந்தார். பனைமரம் சின்னமாக வைத்திருந்தார் என்பதில் பனை மரத்தை தமிழ்நாட்டின் தாயாக நாம் வாழ்த்தி வணங்க கடமை பட்டுள்ளோம்.


செல்: 98405 57997, 98415 49955
V.S.குமார் ரியல் எஸ்டேட்
வீடு, மனை, வாங்க விற்க அணுகவும், வீடு, ஆபிஸ், கடை, குடோன் கம்பெனி வாடகைக்கு அணுகவும்.
டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை, வளசரவாக்கம், சென்னை-87



## M.செசீலி ஸ்டீபன்.
## இராஜாவூர்,செல்:9486356746


# தேன் - தேனீக்கள்:

தேன் மெழுகை பக்குவப்படுத்தியும் விலை உயர்ந்த உபகரணங்கள் செய்யும் தொழிலுக்கு வினியோகம் செய்கிறார்கள். மெழுகு, வார்னீஸ் வாசனை பொருட்கள் போன்ற உயர்தர பொருட்களுக்கு உபயோகப்படுகிறது. இளம் சூட்டில் பாலில் தேன் போட்டு சாப்பிடுவது மிகவும் ஊட்டச்சத்தாக இருக்கும். எல்லா வயதினரும் சாப்பிடலாம். இஸ்ரேல் மக்களை தேனும், பாலும் பொழியும் கானான் தேசத்தை வாக்களித்தார் என்று பழைய வேதம் கூறுகிறது. திருமுழுக்கு யோவான் காட்டில் காட்டு தேனும், சாப்பிட்டு வாழ்ந்தார் என்று பார்க்கிறோம். இவ்விதமாக தேனின் உபயோகம் தெரிகிறது. பழங்குடி மக்கள் ஆதி மனிதன் காட்டில் வாழ்ந்தார்கள். சொட்டு சொட்டாக தேனடையிலிருந்து கீழே விழும் தேனை சுவைத்தறிந்து எங்கு தேனடை கண்டாலும் எடுத்து உண்ண பழகியிருப்பார்கள். பழங்காலத்தில் இமயமலைச் சரிவுகளில் வாழ்ந்த வேதகால ஆரியர்கள் மலைத்தேன் எடுத்தார்கள். தேனடையில் குஞ்சு முட்டைகள் இருக்கும் தாடைகளின் கீழ்பாகத்தை தவிர்த்து மேல் பாகத்தில் இருக்கும் தேனறையிலுள்ள தேனைமட்டும் எடுப்பதற்கு அறிந்திருந்தார்கள் என்று பழங்கால இலக்கியங்கள் வாயிலாக அறியப்படுகிறது. ரிக் வேதம் முதலே இந்திய வரலாற்று சுவடிகளில் தேன் குறித்தும் தேனீக்கள் குறித்தும் குறிப்புகள் உள்ளன. தேன் தேவர்களின் விருப்பமான உணவு, ஆகவே தேன் "தேவாமிர்தம்" என்று உயர்த்தப்பட்டது. ஆகவே எல்லா வைபவங்களிலும் தேன் உபயோகப்படுத்தப்படுகிறது. தேனுடன் பாலை கலந்து பருகு தேனான இனிமையில் அன்பு பகிர்வில் அன்பிய பண்பை வை. "தேனினுமையிலும் தேவனின் நாமம் திவ்ய மதுரமாமே" என்று தேனை தேவனுடைய நாமத்தை நமஸ்கரிக்கின்ற ஒரு இனிமையான மேலான பொருளாக ஏற்றுள்ளோம் என்பதில் தேனின் மகிமையை உணர்கிறோம். முற்காலத்தில் தேனின் குணநலன்கள் நன்கு அறியப்பட்டு உயரிய உபயோகத்தில் பயன்படுத்தப்பட்டு வந்தன. புதியதாக சேரிக்கப்பட்ட தேன் இளம் தேன் மிகவும் ஊட்டச்சத்துடையது என்று ஆராயப்பட்டுள்ளது. இதை தேன் அமிர்தம் என்றும் பழைய தேனில் சிறிய போதை இருக்கும் என்றும் கூறப்படுகிறது. தேன் இனிமையில் (சர்க்கரைகுணம்) வாந்தி பேதி ஆகியவற்றை குணப்படுத்தும் என்றும் ஆயுர்வேத மருத்துவம் கூறுகிறது.

**மலைத்தேனீ:** இவை இந்தியாவில் ஏறக்குறைய எல்லா மாநிலங்களிலும் காணப்படுகின்றன. மலைகள் சமவெளிகளில் காணப்படுகின்றன பெரிய மரங்கள், கோவில்கள் தொழிற்சாலைகளில் காணப்படுகின்றன. பெரிய மரங்கள் உள்ள காடுகளில் அதிகமாக காணப்படுகின்றன. உணவும் கூடு கட்ட இடமும் கிடைக்கும் இடங்களில் அதிகமாக காணப்படுகின்றன. அந்தமான் தீவுகளில் சுந்தரவன காடுகளிலும், வெப்பமான ஈரப்பதம் நிறைந்த சூழ்நிலைகளில் அடர்த்தியான உயரம் குறைந்த மரங்களுள்ள காடுகளிலும் காணப்படுகின்றன. தாவரங்களில் பூ பூக்கும் (வசந்தகாலம்) காலங்களில் ஏராளமான தேனீ குடும்பங்கள் கூடுகட்டுகின்றன. நமக்கு கிடைக்கும் தேன் மலைத்தேன் தான் அதிக விநியோகத்திலுள்ளது.

இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் இமாலயம் முதல், மேற்குத் தொடர்ச்சி மலை பிரதேசம், ஆந்திரம், மகாராஷ்டிரம் எல்லா இடங்களிலும் மலைத்தேனீ உள்ளன. காட்டில் வாழும். பழங்குடி மக்கள் அவர்கள் தங்கள் முறையில் தேன் எடுத்துவருவதால் தேன் மெழுகு வீணாவது தேனீக்கள் அழிந்துபோவது நிறுத்த நவீன முறையில் அவர்களுக்கு தேனீ சர்வோதயா சங்கம் காதிபோர்ட் வழியாக பயிற்சி அளிக்கப்பட்டும் நவீன இயந்திரங்கள் வழியாக தேன் (Extract) எடுத்து தேன் கூட்டு அழியாமல் பாதுகாப்பதால் தேனீக்கள் புதிதாக தாடைகட்ட புதியதாக மெழுகு உற்பத்தி செய்யவேண்டாம் தேன் உடனுக்குடன் சேகரித்து அதிக தேன் அறுவடை செய்யமுடிகிறது. மலைத்தேனீக்களை வீட்டில் வளர்ப்பது கடினம். தேனீக்கள் தேன் எடுக்கும் தாவரங்கள் ஆலமரம், அரசமரம், புங்கமரம், புன்னைமரம், இலந்தமரம், மாமரம், புளியம்மரம், பனைமரம், தென்னை மரம், நாவல்ரம், பூவரசுமரம், வராய்ச்சிமரம் சிறிய புல்புதற்கள் செடி, கொடிகளில் உள்ள பூக்கள் விவசாயம் செய்கிற எல்லாவித காய்கறி செடிகளின் பூக்கள், சோளம், நெற்பயிர்கள், கடுகு பூக்கள் போன்ற எல்லா வகை தாவரங்களிலும் மது நெக்டரலிருந்து சேர்த்து சேகரிக்கிறது. எல்லா பூக்களிலும் தேன் சேகரிக்க செல்லும் போது அதன் கால்கள் இறக்கைகள் சிறிய உரோமங்களில் ஒட்டியிருக்கும் மகரந்த பொடிகள் எல்லா பூக்களிலும் பகிர்வதால் அயல் மகரந்த சேர்க்கை ஆகிறது. கனிகளின் பலன் பல மடங்கு அதிகரிக்கிறது. இது விவசாயிகளின் விவசாய உற்பத்திக்கு அதிகமான உபகார காரணியாக உள்ளது. தான் உண்ணும் உணவுக்கு பதில் உபகாரம் செய்யும் உபகாரியாகவுள்ளது இவ்விதம் தேனீக்கள தேன்சேகரித்தும் தனது உணவுக்காகவும் தன் குடும்ப உணவுக்காகவும் மனித சமூகத்துக்கு உணவாகவும் சேமிக்கிற உணவு அளிக்கும் அன்னபூரணியாகவும் அரசாளியாகவும் விளங்குகிறது. நாட்டு மருத்துவர்கள் பல மருந்துக்களை தேனோடு கலந்து தான் சாப்பிட கொடுக்கிறார்கள்.

எங்கள் அப்பா கி.மு.மிக்கேல் அந்தோணி நாடார் (கிராமணியார்) கிராமமுனிசீப்பாக இருந்தார் புலிகுடி ஆசான் இவர்களிடம் நாட்டு மருத்துவமும், பயிற்சி பெற்றவர், வீட்டில் அன்னபஷ்ப்பம், செந்தூரப்பஷ்பம் செய்வர்கள். இவை வேப்பமர குச்சிகளால் மண் சட்டியில்தான் காய்ப்பார்கள். காய்த்து செங்கல் நிறத்தில் வரும் (செந்தூர்பஷ்ப்பம்) அதை பெஞ்சியில் பேப்பர் வைத்து அதன்மேல் அந்த பஷ்ப்ப கட்டி அதன்மேல் கண்ணாடி பாட்டலை வைத்து உருட்டி மைன்பவுடராக செய்து சிறிய சிறிய பொட்டணமாக பேப்பரில் (5mm) அளவு பொதிவார்கள் இவை தேனில்தான் கரையும் இந்த பொடிகளை தேனில்தான் குழப்பி சாப்பிட சொல்லி கொடுப்பார்கள் இரத்த சுத்திகரிப்பு மருந்து என்று சொல்லுவார்கள் ஆகவே தேனானது நாட்டு மருத்துவர்களின் முக்கய ஒரு உணவாக இருந்து வருகிறது. இந்த பொடிகள் தேனில் மட்டும் தான் கரையும். சிறுதேனீ இவை ஈரான், இந்தோனேசியா நாடுகளில் காணப்படுகிறது என்று கூறுகிறார்கள். இதன் எண்ணிக்கை நெருக்கமானது சிறிய கடுகு, பூ போன்ற பூக்களிலிருந்து தேன் சேகரிக்கிறது. பஞ்சாப் மாநிலத்தில் இவ்வகை தேனீக்கள் வளர்ப்பதாக உள்ளது. கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டத்தில் தேனீக்கள் வளர்த்தலில் வல்லுனர் மாண்புமிகு ஆத்மா அவர்கள் அவருடைய நர்சரியில் வளர்த்து சோதனை பார்த்ததில் இந்த வகை தேனீ தமிழ் தென்னாட்டில் வெற்றி பெறவில்லை என்று கூறினார். ஆனால் இந்தவகை தேனீ வளரும் இடங்களில் இதிலிருந்து அதிக அளவு தேன் கிடைப்பதாக கூறுகிறார்கள். அயல் மகரந்த சேர்க்கைக்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அறிந்துள்ளார்கள். பஞ்சாப், ஹரியானா மாநிலத்தில் கோதுமை, கடுகு கொண்டக்கடலை, பருப்பு வகைகளுக்கு அதிக உபயோகமாக உள்ளது. அம்மாநிலங்களில இவ்வகை தேனீக்கள் வளர்ப்பதாக அறிகிறோம். அயல் மகரந்த சேர்க்கைக்கு ஒரு நல்ல காரணியாக உள்ளது இவ்வகை தேனீக்கள் சிறிய மரங்கள் புதர்கள், சிறிய செடிகளிலுள்ள கிளைகளில் கூடுகட்டி சமவெளிகளில் காணப்படுகின்றன. இதன் எண்ணிக்கை கிடைக்கும் உணவுக்கேற்ப அதிகமாக இருக்கும் தேனும் அதிகமாக கிடைக்கும் ஒரே ஒரு கூடுமட்டும் கட்டும் உணவு கிடைக்கும் இடத்திற்கு மாறி மாறி போய்விடும். இவை நேரடி வெயில் படாத சிறிது நிழல் உள்ள காற்றினால் பாதிப்படையாதவுள்ள பாறைகள் கல் சுவர் ஜன்னல் கம்பிகள் போன்றவற்றிலும் கூடுகட்டுகிறது. என்று மலைத்தேனீக்கள் குறித்த பயிற்சி கையேடு புத்தகத்தில் எழுதி தெரிவித்துள்ளார்கள். காதி வில்லேஜ் கமிஷன்.


- தொடரும்

# வா...வியாபாரி ஆகலாம்

## 18.அளவு

**அமுதா B.பாலகிருஷ்ணன்**

"ஆட்டுக்கு வாலை அளந்துதான் வைச்சிருக்கான் ஆண்டவன்"-னு கிராமத்துல சொல்லுவாங்க.



அதாவது இன்னின்னதுக்கு இன்னின்ன அளவு - வரை முறை இருக்கணும்னு அர்த்தம்.

நமக்குத்தான் முதலாளிகிட்ட நல்லபேர் இருக்கு தேங்குற நினைப்புல அதிகாரம் தூள் பறக்கக் கூடாது.

மத்தவங்களைத் துச்சமாக நினைக்கக் கூடாது. இவ்வளவு நேரம் வேலை செய்தால் போதும் இந்தந்த வேலையைச் செய்தால் போதும்னு அளவு வைத்துச் செய்யக்கூடாது.

காலநேரம் பாராமல் உழைக்கணும்.

எட்டுமணிநேரம் செய்தால் போதாதான்னு நினைக்கக் கூடாது.

சொல்லப்போனால் எட்டு மணி நேரங்கிறது நமக்குத் தான், அதாவது நமது சொந்த உபயோகத்துக்குத்தான் எட்டு மணி நேரம்.

ஏழுமணி நேரம் தூக்கம், ஒரு மணி நேரம் குளிப்பதற்கு, சாப்பிடுவதற்கு, மற்றவற்றுக்கு!

மீதி பதினாறு மணி நேரமும் உழைப்பு, உழைப்பு.. உழைப்புத்தான்!

அமெரிக்காவில் பகல் அதிகம், இரவு குறைவு.

அங்கு பதினாறு மணிநேரம் உழைக்க வாய்ப்பிருக்கிறது உழைக்கிறார்கள்.

இந்தியாவில் இரவும் பகலும் சரிசமமாக இருக்கிறது.

அதனால நம்ம ஆட்கள் பன்னிரண்டு மணிநேரம் தூங்கினாலும் பரவாயில்லன்னு நினைக்கிறாங்க.

ஆனால் இரவையும் பகலா நினைச்சு உழைக்கிற அவங்க வாழ்க்கையில முன்னுக்கு வந்துருறாங்க. நாமளும் இந்த வகையைச் சேர்ந்தவர்களாகத் தான் இருக்கணும்.

சில கடைகள்ல முதலாளி பதினாறு மணிநேரம் வேலைசெய்வார்கள், குமஸ்தா "ஷிப்டு" முறையில் வந்து வந்து வேலை செய்யிற சூழ்நிலை இருக்கும்.

சிலர் ஷிப்டு முறையில்லாமல் முழுநேரமும் இருந்தாலும் வேலை செய்றது என்னமோ எட்டு மணி நேரங்கூட இருக்காது. சும்மா அங்கும் இங்கும் அசைந்து கொண்டிருப்பார்கள்.

நாம் அப்படி இருக்கக் கூடாது, நேரத்தை அளக்கக் கூடாது. வியாபாரத்தை அளக்க வேண்டும். நேற்று எவ்வளவு நடந்தது, இன்று எவ்வளவு நடக்கிறது, நாளை எவ்வளவு நடக்கவேண்டும் என மனதுக்குள் வியாபார சிந்தனைத்தான் ஓட வேண்டும்.

எப்படா மணி ஆகும், சாப்பிட்டுட்டு ஜாலியா டி.வி. பார்க்கலாம்னு நினைச்சிகிட்டு அந்த நினைப்புலேயே நேரத்தைப் போக்கக் கூடாது.

**நேரம் போகலையே - என்பவன் சோம்பேறி**
**நேரம் போதலையே - என்பவன் உழைப்பாளி....**

பண்டிதர் ஜவகர்ஹால் நேரு, லண்டனில் இருந்த போது தனது மகள் இந்திரா காந்திக்க அடிக்கடி லெட்டர் எழுதுவார். சேமநலன்களை விட வாழ்க்கைக்குத் தேவையான பயனுள்ள பல கருத்துக்கள் தான் கடிதத்தில் இடம் பெறும்.

ஒரு சமயம், தனது லெட்டரில், "மகளே, நான் பலமுறை திருடியிருக்கிறேன் -அதனால் பயன் அடைந்துள்ளேன்" - என்று எழுதிவிட்டு, அதற்கு விளக்கமும் அளித்துள்ளார். "ஆம், நான் பலமுறை திருடியுள்ளேன்... எனது உறக்கத்தை, தூங்கும் நேரத்தில் தினமும் இரண்டு அல்லது மூன்ற மணி நேரத்தைத் திருடியுள்ளேன், அதனால் எனக்கு பகல்பொழுது அதிகமாகக் கிடைக்கிறது அதைப் பயனுள்ளதாக மாற்றி, படிக்கின்றேன், எழுதுகின்றேன், பலன் அடைகின்றேன்" - என்று எழுதியிருந்தார்.

அந்தக் கருத்து இந்திராகாந்தியின் அடிமனதில் ஆழமாகப் பதிந்துவிட்டது. அதனால் தான் பிற்காலத்தில் அவர் பிரதம மந்திரியான பிறகு தினமும் ஐந்து மணி நேரம் அல்லது ஆறுமணி நேரத்திற்குமேல் தூங்க வில்லை, தூங்காமல் உழைத்தார்.

அதனால்தான் சொல்கிறேன், முன்னேறத் துடிப்பவன் தூக்கத்தைத் தியாகம் செய்யவேண்டும், உழைப்பைத் தூக்கி நிறுத்தவேண்டும்.

"ஐயய்யோ... சரியா தூங்கலன்னா பைத்தியம் பிடிச்சுடும்"-னு பெரியவங்க சொல்வாங்களே...!

பெரியவங்கதான... சொல்லிட்டுப் போகட்டும்.. நாமளும் பெரியவங்க ஆனதுக்கப்புறம் சொல்லுவோமே!

அறுபது வயசுக்கு மேல நல்லாத் தூங்கலாமே!

அதுவரைக்கும் அயராது உழைக்கலாமே!

"கடைதனில் தூங்கியவன் முதல் இழந்தான். கொண்ட கடமையில் தூங்கியவன் புகழ் இழந்தான்."

- என்கிறார் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனார்.

எனவே தூக்கத்தின் அளவைக் குறைத்து, உழைப்பின் அளவை உயர்த்தினால் நிச்சயம் முன்னேற்றம் அடையலாம், உயரலாம்.

"நாளையிலிருந்து நான் அதிக நேரம் உழைப்பேன்" என்று உறுதி எடுத்துக் கொள்கிறீர்களா...?

வேண்டாம்... அப்படி உறுதி எடுத்துக் கொள்ளாதீர்கள்.

காரணம்... நாளை என்பது நம்முடையதல்ல!

இன்றே, இப்போதே, இந்தக் கணமே.. நான் அதிக நேரம் உழைக்க ஆரம்பித்துவிட்டேன் என்று ஆரம்பித்து விடுங்கள்.

உழைக்கவேண்டுமே என்ற நிர்ப்பந்தத்தில் வேலை செய்யாதீர்கள்.

அப்படிச் செய்தால்... சோம்பல் தலைதூக்கும், உற்சாகம் ஓடிப்போய்விடும்.

பள்ளிக்கூட வாசலில் ஒரு பெரியவர் நின்றார்.

வெளியே வந்த மாணவர்களைப் பார்த்துக் கேட்டார். "தம்பி நீ எதற்காகப் படிக்கிறாய்?"

"எங்கம்மா அப்பா பள்ளிக்கூடத்திற்குப் போய் படின்னு சொன்னாங்க, அதான் படிக்கிறேன்- என்றான் ஒருவன்.

"எங்க டீச்சர் படிக்கச் சொன்னாங்க... அதான் படிக்கிறேன்" என்றான் இன்னொருவன்.

"ஐயா, நான் எனக்காகப் படிக்கிறேன். நான் நன்றாகப் படித்துப் பெரியாளாகணும்.. அதற்காகப் படிக்கிறேன்" என்றான் மூன்றாமவன்.

இந்த மூன்றாவது மாணவன்தான், தனக்காகத், தனது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, தன்னார்வமுடன் தனது படிப்பை, கடமையைச் செய்கிறான். இவன்தான் வெற்றி பெறுவான்.

நாமும் இந்த மூன்றாவது மாணவனைப் போல், நமக்காக, நமது வருங்காலம் வளமாக அமைய அனுபவம் என்னும் அஸ்திவாரத்தை இன்றே இப்போதே பலமாகப் போடலாமே!

Owned at Published by K.M.JULIAN from 21, Krishnappa Naickan Street, Mettupalayam, Chennai-33 and Printed by K.M.JULIAN at "NEW MERIT PRINTERS" No: 14/51, Reddykuppam Road, Saidapet, Chennai-15. Editor K.M.JULIAN.


WE'RE BIG ON FUN
Reach levels of fun and fantasy never before experienced. Regale in a holiday experience filled with high energy entertainment at one of India's largest amusement park.
THRILLING INTERNATIONAL RIDES
WATER RIDES, WAVE POOL & WATER FALLS
MARYWORLD FOR KIDS
AMPHITHEATRE AND ENTERTAINMENTS
AMPLE CAR PARKING, RESTAURANTS
AND POWER BACK-UP
MGM
Dizzee World
East Coast Road, Muttukadu
M.G. Muthu Group
FOR DETAILS CALL
+91-44-27472129 / 27472131
9790955554 / 9500063716 / 17
www.mgmdizzeeworld.com

Regd.No.TN/CC(S) DN/112/2024-2026
Registered Newspaper RNI 55354/1992
Posted at Egmore RMS-1, Partrika Channal Posted on 7.10.2024
PUBLISHED ON FIRST OF EVERY MONTH WPP Licence No.TN/PMG(CCR)/WPP 315/24-26

If underlivered please return to INDIAN NADARMURASU
21,Krishnappa Naiyakan Street,
Mettupalayam, Chennai-600 033.

# பட்டுமேடு அருணாச்சலமூர்த்தி நாடார் இல்ல திருமண விழா

## மணமக்கள்: A.காமாட்சி சரண்யா B.Ccm.,MBA.,(HR) . V.P.நவீன் B.Tech.,(IT).,

மணநாள்: 30.8.2024 (வெள்ளிக்கிழமை)இடம்:அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோவில் வடபழனி, சென்னை-26.




வருகை தந்து வாழ்த்திய அனைவருக்கும் நன்றி! நன்றி!! நன்றி!!!